விலை ரூ. 20/=

# ஈழநாடு

Eelanadu

வடக்கின் முதல் நாளிதழ் - Estd 1959 | மலர் : 01 | 28.04.2021 புதன்கிழமை | இதழ் : 148 | பக்கங்கள் : 16






## மிக மோசமான நிலையில் இலங்கை

# ஜனநாயக உரிமைகள் பறிப்பு அடக்கு முறைகள் அதிகரிப்பு

## சர்வதேச தூதுவர்களுடனான சந்திப்பில் எதிர்க்கட்சி தலைவர் சஜித் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஏப்ரல் 28

“மனித உரிமைகள், ஜனநாயக உரிமைகள் பறிக்கப்பட்டு மிக மோசமான அடக்குமுறை ஆட்சியொன்றை முன்னெடுக்க இந்த அரசாங்கம் முயற்சிக்கிறது. அரசாங்கத்துக்கு சவாலான பாராளுமன்ற உறுப்பினர்களின் பிரஜாவுரிமையைப் பறிக்கும் அளவுக்கு அரச அடக்குமுறை கையாளப்படுகிறது’’ இவ்வாறு ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் உள்ளிட்ட ஐரோப்பாவின் முக்கிய நாடுகளின் தூதுவர்களுடனான சந்திப்பில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார். 15

## கர்ப்பவதி தாய்மாரை தாக்கும் புதிய வைரஸ்

### சிறிய அறிகுறிகள் தோன்றினாலும் பரிசோதனைக்கு அறிவுறுத்தல்

கொழும்பு, ஏப். 28

நாட்டில் பரவி வரும் திரிபு அடைந்த புதிய கொரோனா வைரஸ் கர்ப்பவதி பெண்களிடையே அதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது என மகப்பேற்றியல் நிபுணர் மயூரம்மன டெவொலகே எச்சரிக்கை விடுத்துள்ளார்.

இந்த வைரஸ் நுரையீரலைக் கடுமையாகப் பாதிக்கும் நிலையில் கர்ப்பவதி தாய்மார்களிடையே அதிகமான தாக்கத்தை ஏற்படுத்துகின்றது எனவும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

தற்போதுவரை நாட்டில் 3 கர்ப்பவதி தாய்மார் 15

## உச்சத்தை தொடும் கொரோனா நேற்று 1,096 பேருக்கு தொற்று

கொழும்பு, ஏப் 28

இலங்கையில் முதல்தடவையாக ஒரேநாளில் கொரோனா வைரசினால் பாதிக்கப்பட்ட ஆயிரத் 15

## சுகாதார முறைகளை மீறுவோர் மீது கடுமையான நடவடிக்கை

### வடக்கு ஆளுநர் கடும் எச்சரிக்கை

வவுனியா, ஏப். 28

சுகாதார வழிமுறைகளை மீறுபவர்கள் மீது கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்க அறிவுறுத்தியுள்ளதாக வடமாகாண ஆளுநர் பி.எஸ்.எம்.சாள்ஸ் 15

## இக்கட்டான நிலைமையை பொதுமக்கள் உணராவிட்டால் நிலைமை மோசமாகும்

### சுகாதார பரிசோதகர் சங்கம் எச்சரிக்கை

கொழும்பு, ஏப்.28

நாட்டில் தற்போது மீண்டும் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையை உணர்ந்து மக்கள் செயல்படாவிட்டால் இந்த நோய்ப் பரவலை தடுப்பது, சுகாதாரப் பிரிவின் கட்டுப்பாட்டை மீறிச்செல்லலாம் என இலங்கை பொதுச் சுகாதார பரிசோதகர்கள் சங்கம் எச்சரித்துள்ளது.

இதுதொடர்பில் அந்த 15

## புர்கா வகை ஆடைக்கு தடை

### அமைச்சரவை அனுமதி

கொழும்பு, ஏப்.28

புர்கா உள்ளிட்ட முகத்தை முழுமையாக மூடும் ஆடைகளைத் தடை செய்யும் யோசனைக்கு அமைச்சரவை அனுமதியளித்தது.

சுகாதார வழிகாட்டல்களுக்கமைய முகக்கவசங்கள் தவிர புர்கா உள்ளிட்ட பாது 15

## வடமாகாணத்தில் மேலும் நால்வருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், ஏப்.28

யாழ்ப்பாணத்தில் மேலும் இருவருக்கும், மன்னார், வவுனியாவில் தலா ஒருவருக்கும் என வடக்கு மாகாணத்தில் மேலும் நால்வருக்கு கொரோனா வைரஸ் தொற்று நேற்றுச் செவ் 15



## அனைத்து பாடசாலைகளுக்கும் 30 ஆம் திகதி வரை விடுமுறை!

### அரசாங்கம் நேற்று அறிவிப்பு

கொழும்பு, ஏப்.28

கொரோனா வைரஸ் பரவல் நிலையைக் கருத்தில்கொண்டு நாட்டிலுள்ள அனைத்து பாடசாலைகளுக்கும் நாளைமறுதினம் 30 ஆம் 15

## இரண்டு மீற்றர் இடைவெளி பேணுங்கள்!

### பொதுமக்களிடம் வேண்டுகோள்

கொழும்பு, ஏப். 28

இலங்கையில் தற்போது வேகமாகப் பரவி வரும் புதிய வைரஸ் குறித்த உறுதியான ஆய்வு முடிவுகள் வெளியாகும் வரை இரண்டு மீற்றர் சமூக இடைவெளியைப் பேணுமாறு பொது மக்களுக்கு ஸ்ரீ ஜெயவர்தனபுர பல்கலைக்கழ 15

## ஹரின் பெர்னாண்டோவை நலன் விசாரித்தார் ரணில்



கொழும்பு, ஏப். 28

ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வரும் ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னான்டோவை 15

**உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## இக்கட்டான...

சங்கத்தின் செயலாளர் மஹேந்திர பால சூரிய தெரிவிக்கையில்:

தமிழ் - சிங்கள புத்தாண்டு காலத்தில் மக்கள் செயல்பட்ட விதம், தற்போது நாட்டில் கொரோனா வைரஸ் வேகமாகப் பரவுவதற்கு காரணமாகும். கொரோனா பரவுவதை ஓரளவு கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்திருந்த நிலையிலேயே மீண்டும் பரவ ஆரம்பித்திருக்கின்றது. புத்தாண்டு காலத்தில் இதுதொடர்பில் எச்சரிக்கை விடுத்திருந்தபோதும் மக்கள் அது தொடர்பில் பாரதூரமாகச் சிந்திக்க வில்லை.

அத்துடன் தற்போது நாட்டின் அனைத்து மாவட்டங்களிலிருந்தும் கொரோனா தொற்றாளர்கள் இனம் காணப்பட்டு வருகின்றனர். அதனால் அனைத்து பிரதேசங்களைச் சேர்ந்தவர்களும் முடியுமானளவு சுகாதார பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்றிச் செயல்பட வேண்டும். குறிப்பாக வீட்டிலிருந்து வெளியேறும்போது முகக்கவசம் கட்டாயம் அணிந்து செல்லவேண்டும். மக்கள் நடமாடும் பொது இடங்களுக்கு சென்று திரும்பியதுடன் கைகளைச் சவர்க்காரமிட்டு கழுவிக்கொள்ள வேண்டும். ஒரு மீற்றர் இடைவெளியைப் பேணிக்கொள்ளவேண்டும்- என்றார். (எ)

## வடமாகாணத்தில்...

வாய்க்கிழமை உறுதி செய்யப்பட்டது என்று மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர், மருத்துவர் ஆ.கேதீஸ்வரன் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் போதனா வைத்திய சாலை, யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மருத்துவபீட ஆய்வுகூடங்களில் 499 பேரின் மாதிரிகள் நேற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டன.

இதன்போதே நால்வருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது.

சாவகச்சேரி வைத்தியசாலையில் வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சைக்கு வந்த நோயாளர் ஒருவருக்கு தொற்று கண்டறியப்பட்டது.

இதேவேளை, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலை தனிமைப்படுத்தல் விடுதியில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப் பட்டது.

மன்னார் மாவட்ட வைத்தியசாலை வெளிநோயாளர் பிரிவில் சிகிச்சை பெற்ற ஒருவருக்கு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

வவுனியா பூவரசங்குளம் பிரதேச வைத்தியசாலையில் ஒருவருக்கு கொரோனா தொற்று கண்டறியப்பட்டது என்றும் மருத்துவர் கேதீஸ்வரன் தெரிவித்தார். (எ-03)

## இரண்டு...

கத்தின் நோய் எதிர்ப்பியல் மற்றும் மூலக்கூறு மருத்துவ திணைக்களத்தின் பணிப்பாளர் கலாநிதி சந்திம ஜீவந்திர அறிவுறுத்தியுள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இந்தியாவில் பரவல் அடைந்து வரும் கொரோனா வைரஸின் மாறுபாடு இலங்கையில் பரவி வருகின்றது என்பதற்கு இதுவரை எந்தவிதமான உறுதியான ஆதாரங்களும் இல்லை. இந்தப் புதிய வைரஸ் குறித்து முழு மரபணு பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டதன் பின் அடுத்த வாரம் சரியாகக் கூற முடியும்.

இந்தியாவில் பரவல் அடைந்துவரும் வைரஸ் இலங்கைக்குள் பரவ வாய்ப்புள்ள போதிலும் இதற்கான சாத்தியக்கூறுகளை குறைக்க சுகாதார அதிகாரிகள் அனைத்து நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர்.

இதேநேரம் இந்த வைரஸ் நாட்டில் ஏற்கனவே பரவி வரும் வைரஸின் புதிய மாறுபாடாக கூட இருக்கலாம் என பரிசோதனைகள் காட்டுகின்றன.

பண்டிகைக் காலத்துக்குப் பிறகு கொழும்பு, குருநாகல் மற்றும் கண்டி பகுதிகளிலிருந்து பெறப்பட்ட கொரோனாத் தொற்று மாதிரிகளில் இது போன்ற பிறழ்வை அவதானிக்க முடிந்தது.

எவ்வாறாயினும் மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களைக் கண்டிப்பாக பின்பற்றுவதன் மூலம் புதிய வைரஸ் நாட்டில் மேலும் பரவுவதைத் தடுக்க முடியும்" - என்றார்.

## ஜனநாயக...

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையை கையாள்வதில் அரசாங்கம் பலவீனப்பட்டுள்ளதாகவும், இலங்கையில் சகல மக்களுக்கும் தடுப்பூசியை ஏற்றும் செயல்பாட்டை முன்னெடுக்க சர்வதேச நாடுகளின் பூரண ஒத்துழைப்பு அவசியம் என்பதையும் எதிர்க்கட்சித் தலைவர் சுட்டிக்காட்டினார்.

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் ஐரோப்பிய ஒன்றியத்தின் தூதுவர் டெனிஸ் சைபி, பிரான்சின் தூதுவர் எரிக் லாவெர்ட், இத்தாலியின் தூதுவர் ரீட்டா கியுலியானா மன்னெல்லா, ஜேர்மனியின் தூதுவர் ஹோல்கர் சியூபர்ட், ருமேனியாவின் தூதுவர் விக்டர் சியுஜ்தியா ஆகியோருக்கு இடையிலான முக்கிய சந்திப்பொன்று நேற்றுக் காலை எதிர்க்கட்சித் தலைவர் காரியாலயத்தில் இடம்பெற்றது. இதன்போதே எதிர்க் கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். (எ)

## அனைத்து...

திகதிவரை விடுமுறை வழங்கப்பட்டுள்ளது என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல அறிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்று செவ்வாய்க் கிழமை இடம்பெற்ற ஊடகச் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு அறிவித்துள்ளார்.

இதேவேளை தனியார் கல்வி நடவடிக்கைகளுக்கும் நாளை மறுதினம் 30 ஆம் திகதி வரை தடை விதிக்கப்பட்டுள்ளது.

ஏற்கனவே திருகோணமலை, அம்பாறை, கொழும்பு, மேல் மாகாணம், வடமேல் மாகாணத்திலுள்ள சில பாடசாலைகள் மூடப்பட்டுள்ளன என்பது குறிப்பிடத்தக்கது. (எ)

## கர்ப்பவதி...

கள் அவசர சிகிச்சை பிரிவில் சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் அவர் குறிப்பிட்டார்.

எனவே, கர்ப்பவதி தாய்மார்கள் கொரோனாத் தொற்றிலிருந்து தம்மைப் பாதுகாத்துக் கொள்ள வேண்டும் எனவும் அவர் வலியுறுத்தியுள்ளார்.

கர்ப்பவதி தாய்மார்கள் சிறிய அறிகுறிகள் தோன்றினாலும் கொரோனா பரிசோதனை செய்து கொள்ள வேண்டும் எனவும் மகப்பேற்றியல் நிபுணர் மயூரம்மன டெவொலகே அறிவுறுத்தினார்.

## சுகாதார...

தெரிவித்தார்.

நேற்று இடம்பெற்ற வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தின் பின்னர் ஊடகங்களிற்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அவர், "நேற்றைய அறிக்கையின்படி கொரோனா பரவல் வடக்கில் கட்டுப்பாட்டிற்குள் வந்துள்ளது. பரவலை கட்டுப்படுத்துவதற்காக அரசாங்க அதிபர் களூடாக மீளாய்வுகள் செய்யப்பட்டுள்ளது.

எனவே அதனை கட்டுப்படுத்துவதற்கு கடுமையான நடவடிக்கைகளும் அவற்றை மீறுபவர்களிற்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கும்படியும் அறுவுறுத்தல்களை வழங்கியுள்ளேன்" என கூறினார்.

## புர்கா...

காப்புக்கு அச்சுறுத்தலை ஏற்படுத்தும் முகத்தை மறைக்கக்கூடிய ஆடைகளை அணிவதைத் தடை செய்தவற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியது.

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகர முன்வைத்த யோசனைக்கே அமைச்சரவை இவ்வாறு அனுமதி வழங்கியது. (எ)

கொரோனா கட்டுப்பாட்டு விதிகளை மீறி தோர்த்திருவிழா!

# காமாட்சி அம்பாள் ஆலய தலைவரும் செயலாளரும் பொலிஸாரால் கைது!



யாழ்ப்பாணம், ஏப். 28

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள், ஆலயத்தில் கோவிட்-19 கட்டுப்பாட்டு விதிகளை மீறி தேர்த் திருவிழாவை நடத்திய குற்றச் சாட்டில் ஆலயத்தின் தலைவரும் செயலாளரும் பொலிஸாரும் கைது செய்யப் பட்டுள்ளனர்.

நாட்டில் கொவிட்-19 கட்டுப்பாட்டு சுகாதார விதிமுறைகளை மீறி ஆலயத் திருவிழாவை நடத்தியதன் மூலம் யாழ்ப்பாணத்தில் கோரோனா வைரஸ் பரவலை ஏற்படுத்த வழிசமைத்த குற்றச்சாட்டில் யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய தலைவர், செயலாளர் மீது வழக்குத் தாக்கல் செய்யப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றில் இந்த வழக்கு நாளை விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் வண்ணார்பண்ணை ஸ்ரீ காமாட்சி அம்பாள் ஆலய வருடாந்திர பெருந்திருவிழா இடம்பெற்று வருகிறது. நேற்றுமுன்தினம் தேர்த்திருவிழா இடம்பெற்றது. நாட்டில் சுகாதார விதிமுறைகளுக்கு அமைய 50 பக்தர்களுக்கு மட்டுமே ஆலயத்தில் ஒரே நேரத்தில் வழிபட அனுமதிக்கப்படும் என சுகாதார அமைச்சின் சுற்றறிக்கை சுட்டிக் காட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# ஜனாதிபதி பிரதமருடன் சீன அமைச்சர் பேச்சு

கொழும்பு, ஏப். 28

இரண்டு நாள் பயணமாக நேற்றிரவு இலங்கை வருகைதந்த சீன பாதுகாப்பு அமைச்சர் வே பங்கெ (Wei Fenghe) ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ ஆகியோரை இன்று கொழும்பில் சந்தித்துப் பேச்சுக்களை நடத்தவுள்ளார்.

கொவிட் 19 ஏற்படுத்தியுள்ள பாதிப்பு, கொழும்பு துறைமுக நகர் நிவகாரம் உள்ளிட்ட பல விடயங்கள் இந்தச் சந்திப் பின்போது முக்கியமாக ஆராயப்படும்.



# ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு இல்லை

கொழும்பு, ஏப். 28

கொவிட்-19 நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான ஒட்சிசனுக்கு நாட்டில் தட்டுப்பாடு இல்லை என சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் அசேல குணவர்தன அறிவித்துள்ளார்.

களுபோவில வைத்தியசாலையில், கொவிட்-19 நோயாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கான பிராண வாயுவுக்கு தட்டுப்பாடு நிலவுவதாக, பத்திரிகைகள் மற்றும் சமூக ஊடகங்களில் தகவல் வெளியாகி இருந்தது.

இந்த நிலையில், அது குறித்து ஊடகங்களுக்கு கருத்து தெரிவித்துள்ள சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம், அந்த தகவல் உண்மைக்குப் புறம்பானது எனக் குறிப்பிட்டுள்ளார்.

கொவிட்-19 நோயாளர்களுக்கு அவசியமான பிராணவாயுவுக்கு தற்போது வரையில் தட்டுப்பாடு இல்லை என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## உச்சத்தை...

திற்கும் அதிகமானவர்கள் நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

நேற்றிரவு 10.00 மணியளவில் வெளியான தகவலின்படி 1,096 கொரோனா வைரஸ் நோயாளிகள் நேற்றைய தினம் அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இலங்கையில் இந்தளவு அதிகளவான தொற்றாளர்கள் ஒரே நாளில் அடையாளம் காணப்பட்டிருப்பது இதுதான் முதல் தடவையாகும்.

## ஹரின்...

நேற்று செவ்வாய்க்கிழமை சந்தித்தார்.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற இந்த சந்திப்பின்போது அவரை கைது செய்வதற்கான முயற்சிகள் குறித்து பேசப்பட்டதாக தெரியவருகின்றது.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பாக ஹரின் பெர்னாண்டோவை கைது செய்யத் தவறிய பின்னர், கடந்த ஆட்சியின்போது ஹரின் அமைச்சில் ஏற்பட்ட பிரச்னை தொடர்பாக வழக்குத் தாக்கல் செய்து அவரை கைது செய்ய அரசாங்கம் முயற்சிக்கிறது என ரணில் விக்கிரமசிங்க குறிப்பிட்டார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கிராஞ்சி கடலில் மீன்பிடிக்க கடற்படை அதிகாரி தடை!

## பூநகரி மீனவர்கள் குற்றச்சாட்டு

கிளிநொச்சி, ஏப். 28

**பூநகரி பிரதேசத்தின் கிராஞ்சி கடலில் தொடர்ச்சியாக சென்று மீன்பிடிக்க கடற்படை அதிகாரி தடை விதித்துள்ளார் என்று மீனவர்கள் குற்றஞ்சாட்டுகின்றனர்.**

பூநகரி - கிராஞ்சி பகுதியினர் கடற்றொழிலையே பூர்வீகமாகக் கொண்டுள்ளனர். இந்நிலையில் அப்பகுதிக்கு புதிதாக நியமிக்கப்பட்ட கடற்படை அதிகாரி அவர்களை மீன்பிடி தொழிலை முன்னெடுக்க முடியாதவாறு தடை விதித்துள்ளார் என்று கூறப்படுகின்றது.

இந்நிலையில், குறித்த கடற்படை அதிகாரி சில வருடங்களுக்கு முன்னால் மீனவர்களை தாக்கினார் என்றும், இதனால் அவருக்கு எதிராக மக்கள் போராட்டங்களில் ஈடுபட்டிருந்தனர். இதைத் தொடர்ந்து அந்த அதிகாரிக்கு தண்டனை வழங்க அன்றைய கடற்படை பொறுப்பதிகாரி நடவடிக்கை எடுத்தார். எனினும், மக்களின் வேண்டுதலின் பெயரில் அவருக்கு மன்னிப்பு அளிக்கப்பட்டு இடமாற்றம் செய்யப்பட்டார் என்று தெரிவிக்கப்பட்டது.

இந்நிலையில், மீண்டும் அந்தப் பகுதிக்கு பொறுப்பு அதிகாரியாக வந்துள்ள இடமாற்றம் செய்யப்பட்ட கடற்படை அதிகாரியால் தற்போது மக்களுக்கு எதிராக பல அடக்குமுறைகள் கட்டவிழ்த்து விடப்படுகின்றன என்று குற்றஞ்சாட்டப்படுகின்றது.

இந்நிலையில், அவர்களை மீன்பிடி தொழிலில் ஈடுபடமுடியாதவாறு தடையை ஏற்படுத்தியுள்ளார் என்றும், தம்மை அடிமைகள் போன்று நடத்த முற்படுகின்றார் எனவும் அப்பகுதி மக்கள் குற்றஞ்சாட்டுகின்றனர். மேலும், குறித்த கடற்படை அதிகாரி தகாத வார்த்தைகளால் மீனவர்களை ஏசுகிறார் என்றும் கூறப்பட்டது.

எனவே, இது விடயத்தில் பொறுப்பானவர்கள் தலையிட்டு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் தாம் தொடர்ச்சியாக முன்னர் போன்று தொழிலில் ஈடுபட அனுமதிக்க வேண்டும் என்று கிராஞ்சி பகுதி மீனவர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# 260 சிறைக் கைதிகளுக்கு தொற்று!

கொழும்பு, ஏப். 28

சிறைச்சாலைகளில் கொவிட்-19 வைரஸ் தொற்றாளர்கள் 260 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். புதிதாக சிறை வைக்கப்பட்ட கைதிகளிலேயே அதிக தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டனர் என்று சிறைச்சாலைகள் திணைக்கள ஊடகப்பேச்சாளர், சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

கொவிட்-19 வைரஸ் பரவல் மீண்டும் தீவிரமாக பரவலடைந்து வருகின்ற நிலையில் சிறைச்சாலைகளில் 260 வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளனர். இந்நிலையில் கைதிகளின் உறவினர்கள் அவர்களை பார்வையிட வரும்போது கைதிகள் ஒன்றுகூடுவதால் வைரஸ் பரவல் அதிகரிப்பதற்கான வாய்ப்புள்ளது. இதனால், இரு வாரங்களுக்கு கைதிகளை பார்வையிடுவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

இதன்போது புதிதாக சிறைவைக்கப்படும் கைதிகள் அனைவரும் தடுத்து வைக்கப்பட்டு பி.சி.ஆர். பரிசோதனைகளுக்கு உட்படுத்தப்படுகின்றனர். அதற்கமைய தொற்றாளர்களாக அடையாளம் காணப்படுபவர்கள் சிகிச்சைக்காக கந்தக்காடு சிகிச்சை நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றனர். ஏனையவர்களின் தனிமைப்படுத்தல் காலம் முடிவடைந்ததுடன், உரிய சிறைச்சாலைகளுக்கு அனுப்பிவைக்கப்படுவர்.

இந்நிலையில் புதிதாக சிறை வைக்கப்படும் கைதிகளிலே அதிகளவான வைரஸ் தொற்றாளர்கள் அடையாளம் காணப்படுகின்றனர்.

ஏற்கனவே சிறைவைக்கப்பட்டுள்ள கைதிகளில் தொற்றாளர்களின் எண்ணிக்கை குறைந்த மட்டத்திலேயே இருக்கின்றது. இதேவேளை, கட்டாயம் நீதிமன்றங்களில் முன்னிலைப்படுத்தப்பட வேண்டிய கைதிகள் மாத்திரமே நீதிமன்ற விசாரணைகளுக்காக அழைத்து செல்லப்படுகின்றனர். ஏனையவர்கள், தொடர்பான வழக்கு விசாரணைகள் மெய்நிகர் வழியே இடம்பெற்று வருகின்றன. (ஐ)

### வவுனியா சுற்றுலா மைய விவகாரம்:

# ஒப்பந்தத்தை இரத்து செய்ய வடக்கு ஆளுநர் ஆலோசனை

வவுனியா, ஏப். 28

வவுனியா சுற்றுலா மைய விவகாரத்தில் குத்தகை தரகருடனான ஒப்பந்தத்தை இரத்து செய்யுமாறு வடக்கு மாகாண ஆளுநர் பணித்துள்ளார்.

வவுனியா மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டம் மாவட்டசெயலகத்தில் நேற்று இடம்பெற்றது.

இதன்போது வவுனியா சுற்றுலாமைய விவகாரம் கலந்துரையாடப்பட்டது. வவுனியாவில் நீர்ப்பாசன திணைக்களத்தின் அனுமதியுடன் உள்ளூராட்சி அமைச்சின் நிதி ஒதுக்கீட்டின் கீழ் நகர சபையால் பொழுது போக்கு மையம் ஒன்று அமைக்கப்பட்டிருந்தது. இவ்வாறு அமைக்கப்பட்ட பொழுதுபோக்கு மையம் நபர் ஒருவருக்கு குத்தகைக்கு வழங்கப்பட்டிருந்தது.

பின்னர் அந்த குத்தகைதாரர் நகர சபையின் அனுமதியை பெறாமல் புதிதாகக் கட்டங்களை அமைத்து நிபந்தனைகளை மீறியிருந்தார் என்று நகர சபையால் குற்றம்சாட்டப்பட்டதுடன், அந்தக் கட்டடங்களை அகற்றுவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது.

எனினும், குத்தகைதாரர் நீதிமன்றில் வழக்கு தாக்கல் செய்ததமையால் அதனை உடைப்பதற்கு நீதிமன்றம் இடைக்கால தடையுத்தரவு பிறப்பித்தது. வழக்கு நடவடிக்கைகள் தொடர்ந்து இடம்பெற்றுவருகின்றன.

இந்நிலையில் நேற்று இடம்பெற்ற மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் இவ்விடயம் தொடர்பாக கருத்துக்கள் முன்வைக்கப்பட்டன. இதன்போது கருத்து வெளியிட்ட ஆளுநர், "கட்டிடத்தை அகற்றுவதற்கு எதிராகவே வழக்கு தாக்கல் செய்யப்பட்டுள்ளது. அந்த விடயம் நீதிமன்றில் இடம்பெற்று வருவதால் அதில் தலையிடு செய்யாமல், ஒப்பந்ததாரருடனா குத்தகை ஒப்பந்தம் மீறப்பட்டிருக்கின்றமையை முன்னிறுத்தி அதனை இரத்து செய்ய நடவடிக்கைகளை எடுங்கள்", என்று கூறினார்.

அத்துடன், இது தொடர்பாக சட்டத்தரணிகளின் கருத்துக்களை பெற்று ஏனைய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படவுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது. (ஐ)




**காலை**

5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம் (கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம் (வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம், விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**

1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம் சுத்தோவிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம் தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி வினாத்தாள்

# இப்படியும் நடக்கிறது...!

எங்கள் ஊரில் ஒரு வாத்தியார் இருந்தவர். கொஞ்சம் வித்தியாசமானவர். உறவினர்களான காந்தன் - சந்திரன் என்ற இரண்டு பேருக்கிடையில் குடும்பப் பிரச்னைகள் காரணமாக சின்ன முறுகல்.

நண்பகல் அளவில் காந்தன் வீட்டுக்குச் செல்லும் இந்த வாத்தியார், வீட்டுக்குள் நுழையும்போதே, "நான் சும்மா இவன் சந்திரன் வீட்டடியால போனனான்டா தம்பி. அவன் என்னை கண்ட உடன உன்னைப் பற்றி சொன்ன விசயங்களுக்கு பொல்லாத கோபம் வந்தது கண்டியோ..." என்பார்.

"அவனை விடுங்கோ வாத்தியார்... நீங்கள் வாங்க... இருங்க.., சாப்பிடுங்க..." என்று கவனித்து அனுப்புவார் காந்தன்.

உண்ட களைக்கு காந்தன் வீட்டிலேயே ஓய்வெடுத்து விட்டு மாலையானதும் புறப்பட்டு, நேரே சந்திரன் வீட்டுக்குப் போவார். அங்கேயும் அதேகதை.

"நான் சும்மா இவன் காந்தன் வீட்டடியால போனனான்டா தம்பி. அவன் என்னைக் கண்ட உடன உன்னைப் பற்றி சொன்ன விசயங்களுக்கு பொல்லாத கோபம் வந்தது கண்டியோ....." என்பார்.

"அவனை விடுங்கோ வாத்தியார்... நீங்கள் வாங்க.., இருங்க.., சாப்பிடுங்க..." என்று கவனித்து அனுப்புவார் சந்திரன்.

தமிழ்த் தேசியக் கட்சிகளின் கூட்டத்திற்கு ஆனந்த சங்கரி தலைமையிலான தமிழர் விடுதலைக் கூட்டணிக்கு அழைப்பு விடுக்கப்படாதது குறித்து நேற்று நான் குறிப்பிட்டிருந்தேன்.

அதனைப் படித்த நண்பர் ஒருவர் நேற்று என்னைத் தொடர்புகொண்டார்: "பத்துக் கட்சிகளை அழைத்து மாவை கூட்டம் நடத்தப் போவதை அறிந்த சம்பந்தன் ஐயா, மாவையை தொலைபேசியில் அழைத்து திட்டித் தீர்த்ததாக உங்கட பத்திரிகையிலேயே முன்பக்க தலைப்புச் செய்தி போட்டிருந்தியளே, அது உண்மை எண்டால், சங்கரி ஐயாவையும் அந்தக் கூட்டத்திற்கு மாவை அழைத்திருந்தால் மாவையை சம்பந்தன் ஐயா விட்டு வைத்திருப்பாரா?" என்று கேள்வி எழுப்பினார்.

"அப்படியொரு செய்தியை நாங்கள் கேள்விப்படவும் இல்லை, எங்கள் பத்திரிகையில் பிரசுரிக்கவும் இல்லையே, அதுவும் தலைப்புச் செய்தியாக...", என்றேன் நான்.

"ஆனால், யாழ்ப்பாணப் பத்திரிகை ஒன்றில் அது கொட்டை எழுத்துக்களில் முன்பக்கத்தில் பிரசுரிக்கப்பட்டிருந்ததை நான் படித்தேன்" என்றார் நண்பர்.

நண்பர் இதை கூறிய போது, கூட்டமைப்பின் பங்காளி கட்சி ஒன்றின் தலைவர் முன்னர் ஒருதடவை என்னிடம் குறிப்பிட்ட ஒரு விடயம் எனக்கு நினைவில் வந்தது.

"தமிழ்த் தேசிய கட்சிகள் எல்லாம் ஒரே அணியில் இயங்குவது தொடர்பாக சேனாதி அண்ணர் எடுத்து வரும் முயற்சிகள் தொடர்பாக சம்பந்தன் அண்ணருடன் நான் கதைத்த பொழுது - "அது நல்ல விசயம் தானே தம்பி... அவர்கள் எல்லோருமே எமது கூட்டமைப்பிலிருந்து வெளியேறிவர்கள்தானே. மீண்டும் எல்லோரும் ஒன்றாக பயணிப்பது நல்லதுதானே", என்று சம்பந்தன் அண்ணை என்னிடம் சொன்னார்" என்று அப்போது அந்தப் பங்காளி கட்சி தலைவர் கூறியது எனக்கு இப்போது நினைவுக்கு வந்தது.

அதனை நான் நேற்று என்னோடு உரையாடிய நண்பருக்குச் சொன்னேன். அப்போது அந்த நண்பர் இன்னொரு விடயத்தையும் எனக்கு சொன்னார்.

"மாவையை முதல் நாள் அழைத்து சம்பந்தன் திட்டித்தீர்த்ததாக வெளியான அந்தச் செய்தியைப் பார்த்ததும், கூட்டமைப்பின் மற்றுமொரு பங்காளி கட்சியின் தலைவர் மாவையை தொலைபேசியில் அழைத்து அதுபற்றிக் கேட்டாராம். அப்போது மாவை சொன்னாராம் - 'சாம் அண்ணை நேற்று எனக்கு தொலைபேசி அழைப்பு எடுக்கவே இல்லையே தம்பி... பிறகு ஏன் இப்படி திட்டினார் - கத்தினார் என்று இட்டுக்கட்டி செய்தி போடுகின்றார்கள்?", என்று.

அப்படியெனில் மேற்படி செய்தியில் குறிப்பிடப்பட்டிருந்த இரண்டு தகவல்களுமே தவறானவை என்கிறீர்களா என்று நண்பரை நான் கேட்டேன்.

"எவை அந்த இரண்டு தகவல்கள்?" என்றார் அவர்.

"மாவைக்கு சம்பந்தன் தொலைபேசி அழைப்பு எடுத்து கடிந்துகொண்டார் என்பது முதலாவது தவறான செய்தி. இத்தகைய கூட்டு ஒன்று ஏற்படுவதை சம்பந்தன் விரும்பவில்லை என்பது இரண்டாவது தவறான தகவலா?" என்று கேட்டேன்.

நண்பர் சொன்னார், "கூட்டமைப்பின் பங்காளி கட்சி ஒன்றின் தலைவர் இந்த செய்தி பற்றி குறிப்பிடும் போது ஒருமுறை அவரிடம் சொன்னாராம் - "அது நிச்சயமாக இப்படியொரு கூட்டை விரும்பாதவர்கள் தமது நோக்கத்தை அடைய சம்பந்தனை பயன்படுத்துகிறார்கள் போலவே தெரிகின்றது" என்று.

நம்ம ஊர் வாத்தியார் எனது நினைவில் வந்து போனார்!

- ஊர்க்குருவி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu ஈழநாடு
28.04.2021 புதன்கிழமை
சார்வரி, சித்திரை 15

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

**e-mail: editor@eelanadu.lk**
**தொலைபேசி : 021 730 1370**

# சீன பாதுகாப்பு அமைச்சரின் வருகை

சீன பாதுகாப்பு அமைச்சர் வே பங்கெற் (Wei Fenghe) இரு நாள் பயணமாக நேற்றைய தினம் கொழும்பிற்கு விஜயம் செய்திருக்கின்றார். கொரோனாவிற்கு பின்னரான சூழலில், சீனாவின் மிக முக்கிய இரண்டாம் நிலைத் தலைவர் ஒருவர் கொழும்பிற்கு விஜயம் செய்திருக்கும் இரண்டாவது சந்தர்ப்பம் இதுவாகும். கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம், சீனாவின் வெளிவிவகாரங்களுக்கு பொறுப்பான யங் ஜேசே (Yang Jiechi) கொழும்பிற்கு விஜயம் செய்திருந்தார்.

கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் அரசாங்க உள்ளக மட்டத்திலும், எதிர்கட்சியினர் மத்தியிலும் கடும் அழுத்தங்களை எதிர்கொண்டிருக்கின்ற சூழலிலேயே, சீன பாதுகாப்பு அமைச்சரின் இலங்கைக்கான விஜயம் இடம்பெற்றிருக்கின்றது. இதன்போது, சர்ச்சைக்குரிய கொழும்பு துறைமுக நகர திட்டம் தொடர்பில் சீன பாதுகாப்பு அமைச்சர் நிச்சயம் பேசுவார் என்பதை ஊகிப்பது கடினமான ஒன்றல்ல. சீனாவிடம் மேலும் கடன் உதவிகளை அரசாங்கம் பெற்றிருக்கின்ற நிலையிலும், சீனாவிடமிருந்து பொருளாதார முதலீடுகளை எதிர்பார்த்திருக்கும் நிலையிலும், சீனா ஒருவேளை, கொழும்பு துறைமுக நகரம் தொடர்பில் நிபந்தனைகளை முன்வைக்குமாயின், அதனை அரசாங்கத்தினால் நிச்சயம் புறக்கணிக்க முடியாது.

சீனாவின் பிடியிலிருந்து கொழும்பால் விலகியோட முடியாது. அதற்கான எல்லைக் கோட்டை இலங்கை இழந்துவிட்டதென்பதே, பொதுவான கணிப்பு. சீன விவகாரங்களில் நிபுணரான அமெரிக்க பேராசிரியர் பட்றிக் மென்டிஸ், முப்பது வருடங்களுக்கு பின்னர், சீன வம்சாவளி ஒருவர் இலங்கையின் ஜனாதிபதியாக வரக்கூடிய நிலையிருப்பதாக கூறுமளவிற்கு, சீனாவின் செல்வாக்கு இலங்கைக்குள் வலுவாக வேரூன்றிவிட்டது. பட்றிக் மென்டிஸ் அமெரிக்க இராஜாங்கத் திணைக்களத்தினால் அங்கீகரிக்கப்பட்ட ஒருவராவார். இலங்கைமீதான சீனாவின் செல்வாக்கை ஆட்சி மாற்றங்களினால் தடுத்து நிறுத்தக்கூடிய - அல்லது, ஓர் எல்லைக்குள் முடக்கக் கூடிய காலம்கூட, கடந்துவிட்டதாகவே தெரிகின்றது.

2015இல் இடம்பெற்ற ஆட்சி மாற்றம் இதற்கு சிறந்த உதாரணமாகும். ஏனெனில், அந்தளவிற்கு சீனாவின் பிடிக்குள் இலங்கை அகப்பட்டுவிட்டது. சீனாவின் கடன்களை திருப்பிச் செலுத்தமுடியாத நிலையில்தான், அம்பாந்தோட்டை துறைமுகத்தை 99 வருட குத்தகைக்கு வழங்க வேண்டிய நெருக்கடிக்கு ரணில் அரசாங்கம் தள்ளப்பட்டது. உண்மையில், இலங்கையை சீனாவின் பிடிக்குள் தள்ளிவிட்ட பெருமை மஹிந்த ராஜபக்ஷவையே சாரும். 2015இல் ஆட்சி மாறிய போதிலும்கூட, ஏற்கனவே மஹிந்த செய்துவிட்டுப் போனவற்றின் பிடியிலிருந்து, புதிய அரசாங்கத்தினால் இலகுவில் வெளியில்வர முடியவில்லை. இதன் காரணமாகவே, மேற்குலகின் நண்பரான ரணில் விக்கிரமசிங்க அவ்வாறானதொரு முடிவை எடுக்கவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்பட்டிருந்தது. எப்போது ரணில் அவ்வாறானதொரு முடிவை மேற்கொண்டாரோ, அத்துடன் ரணிலும் மேற்குலகால் கைவிடப்பட்டார். அவரது அரசியல் வாழ்வும் படுமோசமான நிலைக்கு தள்ளப்பட்டது.

விடுதலைப் புலிகளுக்கு எதிரான இறுதி யுத்தத்தை சீனா, மிகவும் கச்சிதமாக பயன்படுத்திக்கொண்டது. இலங்கைக்கு தேவையானவற்றை நிபந்தனையின்றி செய்ததன்மூலம், இலங்கையை தனது விஸ்தரிப்புவாத அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் சிக்கவைப்பதில் வெற்றிபெற்றது. இந்தியாவின் தயக்கத்தையும் - அமெரிக்காவின் மனித உரிமைகள் மீதான கரிசனையையும் - சீனா தனது சதுரங்க ஆட்டத்திற்கான முதலீடாக பயன்படுத்திக்கொண்டது. போர் முடிவுற்றதன் பின்னர் அதுவரையான நிபந்தனையற்ற ஆதரவை, மெதுவாக நிபந்தனையுடன் கூடிய ஆதரவாக உருமாற்றியது. அதில், சீனா முற்றிலும் வெற்றி பெற்றுவிட்டது. இலங்கைத் தீவை அடிப்படையாகக்கொண்டு - நடைபெறப் போகும் சர்வதேச சதுரங்க அரசியலின் அடிப்படையாக சீனாவே இருக்கப்போகின்றது. இது என்ன வகையான விளைவுகளை இலங்கைக்குள் இறக்குமதி செய்யும் என்பதை இப்போதைக்கு ஊகிக்க முடியாது. ஆனால், நிச்சயம் சில விளைவுகளை இலங்கை எதிர்கொள்ள வேண்டி வரலாம்.

# நாதஸ்வர இசையை லயித்தவாறு இவ்வுலக வாழ்வை நீத்த தந்தை செல்வா!

- அலசுவது **இராஜதந்திரி** -

*தமிழ் அரசுக் கட்சியின் ஸ்தாபக தலைவர் சாமுவேல் ஜேம்ஸ் வேலுப்பிள்ளை செல்வநாயகத்தின் 44ஆவது சிரார்த்த தினம் நேற்று முன்தினம் யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வா கலாசார மண்டபத்தில் இடம்பெற்றது.*

*44 வருடங்களுக்கு முன்னர் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் நரம்பியல் சத்திர சிகிச்சைக்கு உட்படுத்தப்பட்டிருந்தார். அச்சமயம் தமது இறுதி மூச்சை தந்தை செல்வா சுவாசித்துக் கொண்டிருந்த சமயம், அவருக்கு சிகிச்சையளித்த நரம்பியல் நிபுணர்கள், தந்தை செல்வாவின் பாரியாரிடம் அவரது கணவருக்குப் பிடித்தமான இசை எது? என்று கேட்டிருந்தனராம். அச்சமயம் திருமதி செல்வநாயகம், தந்தை செல்வாவுக்கு நாதஸ்வர இசை என்றால் அலாதியான பிரியம் என்று கூறியிருந்தார். அப்போது தந்தை செல்வாவின் மருத்துவர்கள், வாழ்வின் இறுதிக் கட்டத்தை தந்தை செல்வா நெருங்கிவிட்டதை செல்வாவின் பாரியாரிடம் பவ்வியமாக எடுத்துக்கூறி, தந்தைக்குப் பிடித்தமான நாதஸ்வர இசையை அவரது படுக்கையருகே ஒலிக்கச் செய்யும்படி கேட்டுக்கொண்டனராம்.*

*அப்போது நாதஸ்வர இசையை அவரது படுக்கைக்கு அருகே ஒலிக்கச்செய்த நிலையில், சில மணி நேரத்தில் அந்த இசையில் லயித்தவாறே தந்தையின் உயிர் பிரிந்தது.*

**காந்தியவாதி**

*பிறப்பால் ஓர் அங்லிக்கன் கிறிஸ்தவரான போதிலும் வடக்கு - கிழக்கின் பெரும்பான்மை இந்துக்களால் மட்டுமல்ல. அப்போது தமிழ் அரசியலில் தம்மையும் பெரிதும் இணைத்துக்கொண்டிருந்த முஸ்லிம் மக்களாலும் போற்றப்பட்டவரே தந்தை செல்வா என்பது குறிப்பிடத்தக்கது. காந்தியடிகளின் சாத்வீக கொள்கையை பின்பற்றியவராக, தமிழரின் அரசியல் போராட்டத்துக்கு அடித்தளமிட்டிருந்தார் தந்தை எஸ். ஜே. வி. செல்வநாயகம். ஆயினும், தென்னிலங்கையின் பேரினவாத சக்திகள் தமது அடக்குமுறைப் போக்கையே எப்போதும் கொண்டிருந்தனர். அரசியலில் தமக்கென ஒரு தனித்துவமான போக்கை வன்முறையற்றதாக கொண்டிருந்நத தந்தை செல்வா, எவரையும் நோகடிக்கும் பாங்கில் நடந்து கொண்டிராத அதேசமயம், தமது கொள்கைகளில் மிக உறுதியானவராக இருந்தார்.*

*தமிழ் பேசும் மக்கள் மட்டுமல்ல, தென்னிலங்கை அரசியல்வாதிகளும் மதித்துப் பொற்றும் விதத்தில் தந்தை செல்வாவின் அரசியல் நடவடிக்கைகள் விளங்கியிருந்தன.*

*கொழும்பு கல்கிசை சென். தோமஸ் கல்லூரியில் கல்வி பயின்ற தந்தை செல்வநாயகம், அக் கல்லூரியிலேயே பின்னாளில் அரசியலில் தமக்கு சவால் விட்டிருந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காவின் பாடசாலை சகாவாகவுமிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது. தந்தை செல்வாவும், பண்டாரநாயக்காவும் அங்கிலிக்கன் கிறிஸ்தவ மதத்தவர்கள். இருந்தபோதிலும் பெரும்பான்மை சிங்கள-பௌத்த மக்களது ஆதரவைப்பெறும் விதத்தில் எஸ். டபிள்யு. ஆர். டி. பண்டாரநாயக்கா பௌத்த மதத்தை தழுவியிருந்தார்.*

**நேர்மையான கிறிஸ்தவர்**

*ஆனால், இந்துக்கள் பெரும்பான்மையாக வாழ்ந்த வடக்கு-கிழக்கு மாகாணங்களில் அரசியலுக்காக தமது மதத்தை மாற்றிக்கொள்ளாதவராக தந்தை செல்வா விளங்கியிருந்தார். அத்துடன், அவர் பிரதிநிதித்துவம்செய்த காங்கேசன்துறை தொகுதி, இந்துக்களை பெரும்பான்மையாக கொண்டிருந்தது. ஆயினும் அவரது பரந்தநோக்கு காந்தியத்தை அடிப்படையாகக்கொண்ட வாழ்க்கைமுறை என்பவை அவரை ஓர் உத்தம அரசியலாளர் என்பதையே வெளிப்படுத்தியிருந்தது.*

*ஒரு மதப்பற்றுமிக்க அங்கிலிக்கன் கிறிஸ்தவராக விளங்கிய போதிலும், இந்து கலாசாரத்தையும், காநாடக இசையையும் நேசிக்கின்ற ஒரு கலா ரசிகனாகவும் தந்தை செல்வா விளங்கியிருந்தார்.*

**பத்திரிகையாளர் இரா. பத்மநாதன்**

*'வீரகேசரி'யைச்சேர்ந்த காலஞ்சென்ற பிரபல பத்திரிகையாளர் இரா. பத்மநாதன் தந்தை செல்வாவுடன் மிக நெருங்கிப்பழகியவர் என்பது குறிப்பிடத்தக்கது. ஒரு தடவை தந்தை செல்வாவின் கலா ரசனை பற்றிக்குறிப்பிடும்போது, 'கொழும்பில் அக்காலத்தில் களைகட்டியிருந்த ஆடி வேல் விழாவில் பிரபல தென்னிந்திய நாதஸ்வர வித்துவான்கள் இசைக் கச்சேரிகளை நடத்தியிருந்தனர். அப்போது தம்மை யாரென்று காட்டிக்கொள்ளாது நாதஸ்வர இசைச்கச்சேரிகளை அமைதியாக ஒரு புறத்தேயிருந்து ரசித்துக்கொண்டிருப்பதை தந்தை செல்வா வழக்கமாக கொண்டிருந்தார்' என்று குறிப்பிட்டிருந்நதார்.*

*எப்போதுமே எளிமையான வாழ்க்கை முறையை பின்பற்றிய தந்தை செல்வா, அக்காலத்தில் கொழும்பிலிருந்து ரயில்வண்டி மூலமாக தமது இல்லம் அமைந்திருந்த தெல்லிப்பழையை வந்தடைந்து, ரயில் நிலையத்திலிருந்து தமது இல்லத்துக்கு தமது பயணப் பொதியை தாமே சுமந்து கால்நடையாகச் செல்வார். அச்சமயம், பலர் தமது மோட்டார் வண்டிகளில் வருமாறு கேட்டுக்கொண்டாலும் தந்தை செல்வா நன்றி உணர்வோடு அவர்களின் வேண்டுதலை மறுத்து கால் நடையாகவே தமது இல்லம் நோக்கிச்செல்வாராம்.*

*தமது தனிப்பட்ட வாழ்விலும், பொது வாழ்விலும் ஒரு நேர்மையாளராகவே வாழ்ந்த தந்தை செல்வா, கடும்போக்கான தென்னிலங்கை அரசியல்வாதிகளிடமிருந்து இலங்கைத் தமிழர்களை 'கடவுள்தான் இனி காப்பாற்ற வேண்டும்' என்று ஒரு தடவை குறிப்பிட்டிருந்தார். அவர் தீர்க்கதரிசனத்ததோடு குறிப்பிட்ட இக்கூற்று, இன்றுவரை மிகப்பொருத்தமானதொன்றாகவே இருக்கின்றது.*

## அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**மேடம்**

வரவு திருப்தி தரும் நாள். மன உறுதியோடு செயல்பட்டு மற்றவர்களை ஆச்சரியப்பட வைப்பீர்கள். தொலை தூரத்தில் இருந்து வரும் தகவல் தொழிலுக்கு உறுதுணை புரியும்.

**இடபம்**

துணிச்சலோடு செயல்படும் நாள். தொழில் தொடங்கும் திட்டங்களை நிறைவேற்றிக் கொள்வீர்கள். வருமானம் திருப்தி தரும். அதிகாரிகள் அனுகூலமாக நடந்து கொள்வர்.

**மிதுனம்**

நட்பு வட்டம் விரிவடையும் நாள். கொடுக்கல் வாங்கல்களை ஒழுங்கு செய்து கொள்வீர்கள் . சொத்துகளால் உருவான பிரச்சினைகளை பஞ்சாயத்துகள் மூலம் தீர்த்துக்கொள்வீர்கள்.

**கடகம்**

தொட்டது துலங்கும் நாள். சுபவிரயம் உண்டு. அத்தியாவசியப் பொருட்களை வாங்குவதில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலில் புதிய பங்குதாரர்களைச் சேர்க்க முன்வருவீர்கள். உடல்நலம் சீராகும்.

**சிம்மம்**

நட்பால் நல்ல காரியம் நடை பெறும் நாள். சமுதாயப் பணிகளில் அதிக ஆர்வம் காட்டுவீர்கள். விலகிச்சென்றவர்கள் மீண்டும் வரலாம். உடன்பிறப்புகள் வழியே சுபச் செய்தி வந்து சேரும்.

**கன்னி**

காதல் திருமணம் கைகூடும். வருமானம் அதிகரிக்கும்.வியாபாரிகளுக்கு புதிய ஆர்டர் கிடைக்கும். பணியாளருக்கு நன்மை உண்டு. அதிர்ஷ்ட தேவதை உங்களைப் பார்த்துப் புன்னகைப்பாள்.

**துலாம்**

பிரச்சினைகளில் இருந்து விடுபடும் நாள். பிள்ளைகளின் நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள். சொத்துகளால் எதிர்பார்த்த லாபம் உண்டு. உறவினர்கள் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும்.

**விருட்சிகம்**

முன்னேற்றம் கூடும் நாள். வி.ஐ.பி.க்களின் சந்திப்பால் விருப்பங்கள் நிறைவேறும். புதிய வாகனம் வாங்கும் முயற்சியில் ஆர்வம் காட்டுவீர்கள். தொழிலில் எதிர்பார்த்த லாபம் கிடைக்கும்.

**தனுசு**

உடன்பிறப்புகளின் வழியில் ஒத்துழைப்பு கிடைக்கும் நாள். வழக்குகள் சாதகமாகும். தொழில் சம்பந்தமாக எடுத்த முயற்சி வெற்றி பெறும். குடும்பச்சுமை கூடும். வருமானம் போதுமானதாக இருக்கும்.

**மகரம்**

உணவு விஷயத்தில் கவனமாக இருப்பது மிகவும் நல்லது. குழந்தைகளுக்கு திடீர் நன்மைகள் உண்டு. யோகம் வரும். நிதானப்போக்கு பற்றிக் கவலை வேண்டாம்.

**கும்பம்**

வரவும், செலவும் சமமாகும் நாள். வருங்கால நலன் கருதி முக்கிய முடிவெடுப்பீர்கள் . குடும்பத்தினர்களை அனுசரித்துச் செல்வது நல்லது. தொழில் வளர்ச்சிக்கு தந்தை வழி ஆதரவு உண்டு.

**மீனம்**

யோசித்துச் செயல்பட வேண்டிய நாள். எந்த காரியத்தையும், எடுத்தோம் முடித்தோம் என்று செய்ய இயலாது. தேக ஆரோக்கியத்திற்காகச் செலவிடும் சூழ்நிலை உருவாகும்.

# றொறொன்ரோ பல்கலை ‘தமிழ் இருக்கை’ உருவாக்க திமுக சார்பில் 10லட்சம் நிதி

## மு.க.ஸ்டாலின் அறிவிப்பு

சென்னை. ஏப். 28

கனடாவில் உள்ள றொறொன்ரோப் பல்கலைக் கழகத்தில் ‘தமிழ் இருக்கை’ உருவாக்க தி.மு.க. சார்பில் 10 லட்சம் ரூபா நிதி வழங்கப்படும் என்று மு.க.ஸ்டாலின் அறிவித்துள்ளார்.

தி.மு.க. தலைவர் மு.க.ஸ்டாலின் நேற்று வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

‘அன்னைத் தமிழ் மொழிக்கு உலகெங்கிலும் உள்ள பல்கலைக்கழகங்களில், ‘தமிழ் இருக்கை’ அமைக்கப்பட்டு, ஆங்காங்கு வாழும் தமிழர்கள் மொழித் தொண்டாற்றி வருகிறார்கள். அவர்களின் சீரிய முயற்சிக்குத் தி.மு.க. தொடர்ந்து



நிதியுதவி அளித்து தமிழ் மொழியின் புகழும், பெருமையும் உலகெங்கும் பரவிடத் தொய்வின்றி பணியாற்றி வருகிறது.

கனடா நாட்டில் உள்ள றொறொன்ரோ பல்கலைக் கழகத்தில் ‘தமிழ் இருக்கை’ உருவாக வேண்டுமென்ற ஆர்வத்தோடு கனடா வாழ் தமிழர்களும், உலகெங்கிலும் வாழும் தமிழர்களும் முயற்சி செய்து வருவதாகவும், அதற்குத் தி.மு.க. சார்பில் நிதியுதவி தந்திட வேண்டுமென்றும் கனடியத் தமிழர் பேரவை நிறைவேற்று இயக்குநர் டன்ரன் துரைராஜா கோரிக்கை விடுத்திருந்தார்.

அதன்படி, எத்திக்கிலும் தமிழ் வளர்ச்சிக்கும், தமிழ் மொழிச் சிறப்பிற்கும் என்றென்றும் ஆக்கபூர்வமான பணிகளில் ஈடுபட்டு வரும் திமுக சார்பில், கனடா றொறொன்ரோப் பல்கலைக் கழகத்தில் அமையவிருக்கும் ‘தமிழ் இருக்கை’க்கு 10 லட்சம் ரூபா நிதியுதவி வழங்கப்படுகிறது. செம்மொழித் தமிழின் சிறப்பு எங்கெங்கும் பரவட்டும், இளைஞர்களின் தாய்மொழித் தாகத்தைத் தீர்க்கட்டும்’ என அவர் கூறியுள்ளார்.

# 2ஆம் அலையை எதிர்கொள்ள 12,370 ஒட்சிசன் படுக்கை வசதிகள் தயார் செய்யும் பணி தீவிரம்

சென்னை, ஏப். 28

கொரோனா இரண்டாம் அலையை எதிர்கொள்ள தமிழகம் முழுவதும் மருத்துவமனைகளில் 12,370 ஒட்சிசன் படுக்கை வசதிகள் போர்க்கால அடிப்படையில் பொதுப்பணித் துறையின் மூலம் மேற்கொள்ளப்படும் பணிகள் ஆரம்பமாகியுள்ளன.

கொரோனா கடந்த ஆண்டு மார்ச் மாதம் முதல் அலை வந்த பொழுது தமிழ்நாடு முழுவதும் அரசு மருத்துவக் கல்லூரிகள் மற்றும் மருத்துவமனைகள், மாவட்ட தலைமை மருத்துவமனைகள், அரசு பொது மருத்துவமனைகள் மற்றும் ஆரம்ப சுகாதார நிலையங்கள் ஆகிய 138 மருத்துவமனைகளில் ரூ.282.51 கோடி மதிப்பில் 27,806 படுக்கை வசதிகள் மற்றும் தீவிர சிகிச்சைப் பிரிவு தனிமைப்படுத்தும் வார்டுகள் மற்றும் இதர சுகாதார வசதிகள் ஏற்படுத்தும் பணிகள் பொதுப் பணித்துறையால் அவசரகால பணியாக மேற்கொள்ளப்பட்டது. இதில் 21,692 படுக்கைகளுக்கு ஒட்சிசன் இணைப்புகள் வழங்கப்பட்டுள்ளது.

அதுபோலவே இவ்வாண்டு கொரோனா இரண்டாம் அலையை எதிர்கொள்ளவும், பொது மக்களுக்கு தரமான மருத்துவ சிகிச்சை வழங்கிடவும் அனைத்து மருத்துவமனைகளிலும் கூடுதலாக 12,370 ஒட்சிசன் இணைப்புகளுடன் கூடிய படுக்கை வசதிகள் அரசு அறிவுறுத்தலின் பேரில் பொதுப்பணித் துறையால் போர்க்கால அடிப்படையில் பணிகள் நடைபெற்று வருகின்றன.

சென்னையில் உள்ள மருத்துவமனைகளுக்கு மட்டும் கடந்த ஆண்டு 2,912 ஒட்சிசன் இணைப்புகளுடன் கூடிய படுக்கை வசதிகள் செய்யப்பட்டது. இத்துடன் கூடுதலாக இவ்வாண்டு 2,895 ஒட்சிசன் இணைப்புகளுடன் கூடிய படுக்கை வசதிகள் அமைக்கும் பணி நடைபெற்று வருகிறது.

# ஒட்சிசன் உற்பத்திக்கு அனுமதி வழங்கலாம்

## கனிமொழி

சென்னை, ஏப். 2

வேறு எந்த வடிவிலும் ஸ்டெர்லைட் ஆலையை இயக்க அனுமதிக்கக்கூடாது என்றும், ஆக்சிஜன் உற்பத்திக்கு மட்டுமே அனுமதி வழங்கலாம் என்றும் கனிமொழி எம்.பி. தெரிவித்தார்.

முதல்வர் எடப்பாடி பழனிசாமி தலைமையில் நடந்த அனைத்துக் கட்சிக் கூட்டத்தில், திமுக சார்பில் அமைப்புச் செயலாளர் ஆர்.எஸ்.பாரதி மற்றும் மகளிர் அணிச் செயலாளர் கனிமொழி எம்.பி. ஆகியோர் பங்கேற்றனர். இந்த கூட்டத்தில், கனிமொழி பேசியதாவது:

நாடு முழுவதும், ஏன், தமிழ்நாட்டிலேயே கூட ஒட்சிசன் தேவைப்படுகின்ற இந்த நேரத்தில்- ‘ஸ்டெர்லைட் ஆக்சிஜன் பிளாண்ட்டை’ மட்டும் இயக்கி, மக்களைக் காத்திட ஒட்சிசன் தயாரிப்பது குறித்து, மனித நேயத்தின் அடிப்படையில் நாம் எடுக்க வேண்டிய முடிவுதானே தவிர ஸ்டெர்லைட் ஆலையை தொடர்ந்து இயக்குவதற்கு அல்ல.

நாட்டு மக்கள் எல்லாம் தமிழ்நாட்டை நோக்கி ஒட்சிசன் கோரிக்கையை வைக்கி



றார்கள். உச்ச நீதிமன்றமே ஏன் மாநில அரசே அதை தயாரித்துக் கொடுக்கக் கூடாது என்று தமிழகத்தை பார்த்துக் கேட்கிறது. இந்த நேரத்தில் ஒரு மைப்பாட்டின் பக்கம் மனிதாபிமானத்தின் பக்கம் எப்போதும் நிற்கும் தமிழகம் ஒட்சிசன் வழங்குவதிலும் முன்னணியில் நின்றது என்ற பெருமையும் நாம் பெறக் கூடியதுதான்.

ஆகவே உச்ச நீதிமன்றத்தில் தமிழக அரசின் சார்பில் கருத்துகளை முன்வைக்கும் போது, ஸ்டெர்லைட் ஆலையில் ஒட்சிசன் பிளாண்ட் மட்டும் செயல்பட அனுமதிப்பது என்றால், முக்கியமான சில கருத்துகளை முன்வைக்க வேண்டும். அதில், இந்த அனுமதி தற்காலிகமானதாக இருக்க வேண்டும் என அவர் பேசினார்.



# இயக்குநர் தாமிரா கொரோனாவுக்கு பலி

சென்னை, ஏப் 28

கொரோனா தொற்றுக்கு சிகிச்சை பெற்று வந்த தமிழகத்தின் இயக்குநர் தாமிரா (52) சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். ஆண் தேவதை, ரெட்டசுழி ஆகிய படங்களை இவர் இயக்கியுள்ளார். இந்த நிலையில் சில நாட்களுக்கு முன்னதாக இயக்குனர் தாமிராவுக்கு கொரோனா பாதிப்பு கண்டறியப்பட்டது. அதனைத்தொடர்ந்து சென்னையில் உள்ள தனியார் மருத்துவமனையில் சிகிச்சையாக சேர்க்கப்பட்டு, அவருக்கு தீவிர சிகிச்சை அளிக்கப்பட்டு வந்தது.

நேற்று காலை இயக்குநர் தாமிராவுக்கு அதிக அளவில் மூச்சுத்திணறல் ஏற்பட்டுள்ளது. மூச்சுத்திணறலுக்கு அளிக்கப்பட சிகிச்சை பலனளிக்காமல் அவர் உயிர் பிரிந்ததாக மருத்துவமனை தரப்பில் தகவல் தெரிவிக்கப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பலமிக்க ஆட்சியே எங்களின் திட்டம்

## விமல், கம்மன்பில கூட்டாக பதில்

கொழும்பு, ஏப். 28

**அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அரசை விட்டு வெளியேறுவதும் எமது கொள்கை அல்ல. பலமிக்க ஆட்சியைக் கொண்டு நடத்துவதே எமது திட்டம். இதை உணர்ந்து பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ செயல்படவேண்டும் என அமைச்சர்களும் பங்காளிக் கட்சித் தலைவர்களுமான விமல் வீரவன்ஸ மற்றும் உதய கம்மன்பில ஆகியோர் ஊடகங்களிடம் கூட்டாகத் தெரிவித்தனர்.**

'அரசின் திட்டங்களை அரசுக்குள் இருந்து விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து தாராளமாக வெளியேறலாம். கதவு திறந்துதான் உள்ளது' என்று பிரதமர் மஹிந்த ஆளும் கட்சி பாராளுமன்ற உறுப்பினர்களுடனான சந்திப்பின்போது காரசாரமாகத் தெரிவித்திருந்தார்.

பிரதமரின் இந்தக் கருத்துத் தொடர்பில் கேட்டபோதே அவர்கள் மேற்கண்டவாறு கூறினார்.

அவர்கள் மேலும் தெரிவித்ததாவது:-

பிரதமரின் இந்தக் கருத்துக்கள் ஆரோக்கியமானவை அல்ல. அரசுக்குள் இருக்கின்ற முரண்பாடுகளை, கருத்து வேறுபாடுகளைப் பேசித் தீர்க்க வேண்டும் என்றே நாம் பிரதமரிடம் பல தடவைகள் கோரியிருந்தோம். என்ன முரண்பாடுகள் இருந்தாலும் அதை நேரில் பேசித் தீர்க்கலாம். அதற்கு நாம் தயாராக உள்ளோம்.

அரசை விமர்சிப்பவர்கள் அரசிலிருந்து வெளியேறலாம் என்று பிரதமர் தெரிவித்துள்ள கருத்துக்கள் எமக்கான கருத்துக்கள், குறிப்பாக பங்காளிக் கட்சிகளுக்குரிய கருத்துக்கள் என்று நூறு வீதம் அர்த்தம் கொள்ளக் கூடாது. இது பொதுவான கருத்துக்களாகவும் இருக்கலாம். எம்மை நோக்கிய கருத்துக்களாகவும் இருக்க லாம். அவரை தவறான வழிக்கு கொண்டு செல்ல முயல்பவர் களுக்கு அவர் தெரிவித்த கருத் துக்களாகவும் இருக்கலாம்.

எனவே, என்ன பிரச்னைகள் என்றாலும் நாம் பேசித் தீர்க்க தயாராக இருக்கின்றோம். அரசைக் கவிழ்ப்பது எமது நோக்கமல்ல. அரசை விட்டு வெளியேறுவதும் எமது கொள்கை அல்ல. பலமிக்க ஆட்சியைக் கொண்டு நடத்துவதே எமது திட்டம். இதை உணர்ந்து பிரதமர் செயற்பட வேண்டும். இல்லையேல் அதன் விளைவுகள் எப்படியிருக்கும் என்று நாம் சொல்லத் தேவையில்லை. இந்த ஆட்சிக்கு ஆணை வழங்கிய மக்களையும் ஏமாற்றத் தயாரில்லை - என்றனர்.

(அ)

# இந்திய மக்களுக்காக பிரார்த்திப்போம்

## நம்மையும் பாதுகாத்து கொள்வோம் மனோ கணேசன் எம்.பி.



கொழும்பு, ஏப். 28

எம்மைவிட மோசமாக கொரோனா பேராபத்தில் விழுந்து விட்ட அப்பாவி இந்திய மக்களுக்காக, எல்லா பேதங்களையும் தள்ளி வைத்து விட்டு, மனிதத்தின் பெயரால் பிரார்த்தனை செய்யுங்கள் என தமிழ் முற்போக்கு கூட்டணி தலைவர் மனோ கணேசன் எம்.பி. கோரிக்கை விடுத்துள்ளார்.

மனோ எம்பி மேலும் கூறியுள்ளதாவது:-

சுமார் 130 கோடி சனத்தொகை கொண்ட பாரத தேசம், இன்று கொரோனாவின் கோரப்பிடியில் சிக்கி அல்லலுறுகின்றது. இந்திய நகரங்களிலும், கிராமங்களிலும் வாழும் மக்களின் கண்ணீர் எமக்கு தெரிகிறது. இது கொரோனா சுனாமி அவலம் என கூறப்படுகின்றது.

எமது நாட்டிலும் இந்த கொரோனா கொடுமை புதிய வீரியத்துடன் பரவி வருகின்றது. நாட்டின் சுகாதார துறையினருக்கு வழங்கும் பூரண ஒத்துழைப்பின் மூலம் இதை நாம் எதிர் கொள்ளவேண்டும். அரசாங்கத்தை பொறுப்புடன் செயற்படுமாறு கூறும், அதே வேளை, பொதுமக்களாகிய நாமும் பொறுப்புடன் நடந்து இந்த பேரழிவை எதிர்கொள்ள வேண்டும்.

மிகப்பெரிய சனத்தொகையை கொண்டுள்ள எமது மிக நெருங்கிய அயல் நாடான இந்தியாவில், ஒட்டு மொத்த சனத்திரளின் மத்தியில் வீரியமுள்ள கொரோனா கிருமிகள் வேகமாக பரவி வருவதை செய்திகள் தெரிவிக்கின்றன. இந்நிலையில் பாரதம் இந்த கொடுமையிலிருந்து விரைவில் மீள வேண்டும் என்ற நோக்கில் நாம் நமது வீடுகளில் இருந்தபடி பூஜை, நமாஸ் பிரார்த்தனைகளில் ஈடுபட வேண்டும் என கேட்டுக்கொள்கிறேன்- என்றார்.

# துறைமுக நகர ஆணைக்குழு சட்டமூலத்தில் குறைபாடு

## உதய கம்மன்பில கூறுகிறார்



கொழும்பு, ஏப். 28

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர வலய பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் ஒரு சில குறைபாடுகள் காணப்படுகின்றன. இச்சட்டமூலம் குறித்து நீதிமன்றம் வழங்கியுள்ள தீர்மானத்தை முறையாக செயற்படுத்துவோம். 1978 ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட கொழும்பு ஆணைக்குழு சட்டமூலத்திற்கும், உத்தேச கொழும்பு துறைமுக நகர பொருளாதார வலய ஆணைக்குழு சட்டமூலத்திற்கும் இதற்குமிடையில் பாரியளவு வேறுப்பாடுகள் கிடையாது என சக்தி வலு அமைச்சர் உதய கம்மன்பில தெரிவித்தார்.

அவர் மேலும் குறிப்பிடுகையில்-

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர சட்டமூலம் தொடர்பில் எதிர்தரப்பினர் தவறான நிலைப்பாட்டை தோற்றுவித்துள்ளார்கள். கொழும்பு துறைமுக நகர விவகாரத்தில் சர்வதேசத்தின் தலையீடு தற்போது அதிகரித்துள்ளது. ஒரு தரப்பினரது குறுகிய தேவைகளை அரசியல்வாதிகளும், ஆளும் தரப்பின் ஒரு சிலரும் நிறைவேற்ற முயற்சிக்கிறார்கள்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்தில் தனி நாட்டுக்கான அனைத்து அம்சங்களும் உள்ளடக்கப்பட்டுள்ளதாக ஜனாதிபதி சட்டத்தரணி விஜயதாஸ ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளமை ஏற்றுக் கொள்ள முடியாது. கொழும்பு துறைமுக நகரத்தில் வரையறுக்கப்பட்ட நிலப்பாரப்பு மாத்திரம் காணப்படுகின்றதே தவிர வரையறுக்கப்பட்ட மக்கள் தொகை, சர்வதேச ஒப்பந்தங்களுக்குகான அங்கீகாரம் என்பதொன்றும் கிடையாது-என்றார்.

# ரிஷாத்துக்கு 90 நாள் தடுப்புக்காவல்

கொழும்பு, ஏப் 28

கைது செய்யப்பட்டுள்ள பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் மற்றும் அவரது சகோதரரை 90 நாட்கள் தடுத்து வைத்து விசாரிக்க அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன், அவரது சகோதரர் ரியாஜ் பதியுதீன் ஆகியோர் நேற்று முதல் 90 நாட்களுக்கு தடுத்து வைத்து விசாரிக்கப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சாளர் தெரிவித்துள்ளார்.

# கரைச்சி பிரதேச சபையை மூன்றாக பிரிப்பது தொடர்பில் கலந்துரையாடல்

கிளிநொச்சி, ஏப். 28

கரைச்சி பிரதேச சபையினை மூன்றாக பிரிப்பது தொடர்பான கலந்துரையாடல் நேற்று கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் தலைமையில் இடம்பெற்றது. இந்த கலந்துரையாடல் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் ரூபவதி கேதீஸ்வரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் 2 மணியளவில் ஆரம்பமானது.

கரைச்சி பிரதேச சபையை கிளிநொச்சி நகர சபையாகவும், கரைச்சி மற்றும் கண்டாவளை பிரதேச சபைகளாகவும் மூன்றாக பிரிப்பது தொடர்பில் மும்மொழியப்பட்டது.

குறித்த கலந்துரையாடலில் வடக்கு மாகாண உள்ளூராட்சி அமைச்சின் செயலாளர், வட மாகாண உள்ளூராட்சி ஆணையாளர், கரைச்சி, கண்டாவளை, பூநகரி, பச்சிலைப்பள்ளி பிரதேச செயலாளர்கள், பிரதேச சபை தவிசாளர்கள், மற்றும் செயலாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

இதுவரை காலமும் கரைச்சி, கண்டாவளை பிரதேச செயலாளர் பிரிவுகள் கரைச்சி பிரதேச சபையின் ஆளுகையின் கீழ் இருந்தது. தற்போது கிளிநொச்சி நகரை மையப்படுத்திய வகையில் நகர சபையாகவும், கண்டாவளை மற்றும் கரைச்சி பிரதேச சபைகளை தனித்தனியாக உருவாக்குவது தொடர்பில் ஏற்கனவே மும்மொழியப்பட்டிருந்தது.

அதற்கு அமைவாக குறித்த கலந்துரையாடல் இடம்பெற்ற நிலையில், எதிர்வரும் 30ஆம் திகதிக்கு முன்பதாக பொதுமக்களின் கருத்துக்களை உள்ளடக்கிய கள ஆய்வை சமர்ப்பிக்குமாறு மாவட்ட அரசாங்க அதிபர் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் விரைவில் கரைச்சி பிரதேச சபையானது மூன்றாக பிரிக்கப்பட்டு மக்களிற்கு சேவைகளை வழங்கவுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியைவிட கொழும்புத் துறைமுக நகருக்கு அதிக அதிகாரங்கள்

## ரணில் விக்கிரமசிங்க தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 28

துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலத்திற்கு அங்கீகாரம் அளிக்கப்பட்டால் பிரபாகரனின் கட்டுப்பாட்டில் இருந்த வடக்கின் சில பகுதிகளை விட கொழும்பு துறைமுக நகரத்திற்கு அதிக அதிகாரங்கள் இருக்கும் என ரணில் விக்ரமசிங்க தெரிவித்துள்ளார்.

இந்த துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்து ஆங்கில ஊடகம் ஒன்றுக்கு வழங்கிய விசேட செவ்வியிலேயே அவர் இதனை குறிப்பிட்டுள்ளார்.

ஒரு நாடு ஒரு சட்டம் என்ற நிலை மாற்றப்பட்டு இப்போது ஒரு நாட்டிற்கு இரண்டு சட்டங்கள் காணப்படுவதாகவும் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டினார்.

தற்போது சீன காலனியாக கொழும்பு துறைமுக நகரம் மாறினால் அது போரின்போது பிரபாகரன் கட்டுப்பாட்டில் இருந்த பகுதியை விட அதிக அதிகாரம்கொண்ட பகுதியாக இருக்கும் என்றும் ரணில் விக்கிரமசிங்க குற்றம் சாட்டினார்.

ஒரு நல்ல சட்டத்தை எவரும் தடுக்கப் போவதில்லை. அதனை இயற்றுவதற்கு முன்னர் மறுபரிசீலனை செய்ய நீதிபதிகள் இருக்க வேண்டும், அமைச்சரவை இறுதியாக பொறுப்பேற்க வேண்டும். ஆனால் இங்கு அந்த நிலைமை இல்லை.

2001-2004 க்கு இடையில் ரணில் விக்கிரமசிங்க பிரதமராக இருந்தபோது வடக்கு மற்றும் கிழக்கின் பெரும்பகுதியை பிரபாகரன் கட்டுப்பாட்டில் வைத்திருந்தார்.

நோர்வே கொண்டுவந்த சமாதான உடன்படிக்கை மூலம் வடக்கு மற்றும் கிழக்கில் ஒரு தனி மாநிலத்தை உருவாக்க பிரபாகரனை அனுமதித்ததாக ரணில் விக்கிரமசிங்க மீது குற்றச்சாட்டு முன்வைக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாடியில் அணிவது முகக்கவசம் அல்ல!

## இ.போ.ச. பஸ் நடத்துநருக்கு ஊர்காவற்துறை நீதிவான் அறிவுரை

யாழ்ப்பாணம், ஏப். 28

**முகக்கவசம் அணியாமல் கடமையில் ஈடுபட்ட இலங்கை போக்குவரத்து சேவையின் நடத்துநரை கடும் எச்சரிக்கை, அறிவுரையின் பின்னர் ஊர் காவற்துறை நீதிவான் நீதிமன்றம் விடுதலை செய்தது.**

**இதுபோன்ற பொறுப்பற்ற நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் தமது குடும்பத்தையும், சமூகத்தையும் ஆபத்தில் தள்ளுகிறார்கள் என நடத்துநருக்கு, திறந்த நீதிமன்றத்தில் அறிவுரை கூறினார் நீதிவான்.**

ஊர்காவற்துறை சுகாதார வைத்திய அதிகாரி பரா.நந்த குமார் தலைமையில் நேற்று ஊர்காவற்துறைப் பகுதியில் சுகாதார விழிப்புணர்வு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. இதன்போது, முக்ககவசம் அணியாமல் வர்த்தக, பொது நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்களுக்கு அறிவுரை கூறப்பட்டது.

இனிமேல் முகக்கவசம் அணியாமல் வீதியில் நடமாடினால் வழக்கு தாக்கல் செய்யப்படும் என அவர்கள் எச்சரிக்கப்பட்டு அனுப்பி வைக்கப்பட்டனர்.

இதன்போது, ஊர்காவற்றுறையில் இருந்து யாழ்ப்பாணத்திற்கு சேவையில் ஈடுபட்ட இ. போ.ச. பஸ்ஸில் பயணிகளும், நடத்துநரும் முகக்கவசம் அணியாமல் இருந்தமை அவதானிக்கப்பட்டது. அந்த பஸ்ஸை சுகாதார ப்பிரவினர் வழிமறித்து, முக்ககவசம் அணியாமலிருந்த பயணிகளுக்கு அறிவுரை கூறினர்.

நடத்துநர் முகக்கவசம் அணிந்து, அதை நாடிக்கு கீழே இழுத்து விட்டிருந்தார். முகக்கவசத்தை முறையாக அணிய வேண்டியது குறித்து அவருக்கு விளக்கமளித்தபோது, அவர் அதை ஏற்காமல் முரண்பட்டார்.

இதையடுத்து, அவர் கைது செய்யப்பட்டு, ஊர்காவற்றுறை நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டார். சுகாதார வைத்திய அதிகாரி பரா.நந்த குமார், முகக்கவசம் அணியாமல் சுகாதார விதிமுறையை மீறியது உள்ளிட்ட சில பிரிவுகளின் கீழ் வழக்கு தொடர்ந்தார்.

நீதிவான் கஜநிதிமாறன் சுமார் 30 நிமிடங்கள், நடத்துநருக்கு அறிவுரை கூறினார்.

வறிய மக்களே பஸ்களை பயன்படுத்துகிறார்கள். பெருந்தொற்றிலிருந்து பாதுகாப்பாக இருக்கும் சூழலை சேவையில் ஈடுபடும் சாரதியும், நடத்துநருமே உறுதி செய்ய வேண்டும். இப்படி பொறுப்பற்ற விதமாக செயற்படுபவர்கள் சமூகத்தையும் அபாயத்தில் தள்ளி, தமது பிள்ளைகளுக்கும் துரோகமிழைக்கிறார்கள் என காட்டமாக அறிவுரை கூறினார்.

போக்குவரத்தில் ஈடுபடும் மக்கள் சுகாதார விதிமுறைகளை பேணுகிறார்களா என்பதற்கான பொறுப்பு சாரதியும், நடத்துநருமே என்பதையும் நீதிவான் சுட்டிக்காடடினார்.

வாயையும், மூக்கையும் மூடி அணிவது மட்டுமே முகக்கவசம். அவற்றை மூடாமல், நாடிக்கு அணிந்திருப்பதை, முகக்கவசமாக கருத முடியாது என்றும் சுட்டிக்காட்டினார்.

முதலாவது முறையென்பதால், நடத்துநர் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்படுவதாகவும், இன்னொரு சந்தர்ப்பம் இது போல நேர்ந்தால் கடுமையான தண்டனை வழங்கப்படுமென நீதிவான் சுட்டிக்காட்டி அவரை விடுவித்தார்.

பஸ்ஸில் பயணிக்கும் பயணிகள் முகக்கவசம் அணிந்திருப்பதை சாரதியும், நடத்துநருமே உறுதி செய்யவேண்டும், முகக்கவசம் அணியாத நடத்துநர் நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்ட விவகாரம் இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய தலைமை காரியாலயத்திற்கும் சுட்டிக்காட்டப்பட வேண்டுமென சுகாதார வைத்திய அதிகாரி கேட்டுக் கொண்டார். நீதிவான் அதற்கான உத்தரவை பிறப்பித்தார்.

# மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை மீள சுவீகரிக்கும் நோக்கம் எமக்கு இல்லை

## இராணுவத் தளபதி கூறுகிறார்



கொழும்பு, ஏப். 28

மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை மீண்டும் சுவீகரிக்கும் நோக்கம் எமக்கு இல்லை. ஆனால், நீங்கள் குறிப்பிடும் விடயம் தொடர்பில் ஆராய்கின்றேன் என இராணுவத் தளபதி ஜெனரல் சவேந்திர சில்வா ஊடகங்களிடம் தெரிவித்தார்.

நல்லாட்சி அரசின் காலத்தில் காங்கேசன்துறையில் விடுவிக்கப்பட்ட தனியார் காணிகளை இராணுவத்தினர் மீளக்கையகப்படுத்துவது தொடர்பில் கேட்டபோதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.


அவர் மேலும் தெரிவித்ததாவது:-

மக்களிடம் ஒப்படைக்கப்பட்ட காணிகளை நாம் மீள ஆக்கிரமிக்கவில்லை. அவற்றைச் சுவீகரிக்கும் நோக்கமும் எமக்கு இல்லை. காங்கேசன்துறையில் நீங்கள் குறிப்பிடும் விடயம் தொடர்பில் ஆராய்ந்து பார்க்கின்றேன் - என்றார்.

(அ)

# மக்கள் அலட்சியமாக செயல்பட்டால் கடும் கட்டுப்பாடுகள் விதிக்கப்படும்

## சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே கூறுகிறார்



கொழும்பு, ஏப். 28

நாட்டு மக்கள் தொடர்ச்சியாக சுகாதார வழிகாட்டல்களை பின்பற்றுவது தொடர்பில் அலட்சியம் காட்டினால் கடுமையான கட்டுப்பாடுகளை பிரயோகிக்க நேரிடும் என கொரோனா வைரஸ் கட்டுப்பாடு தொடர்பான இராஜாங்க அமைச்சர் சுதர்ஷனி பெர்னாண்டோபுள்ளே தெரிவித்துள்ளார்.

இக்காலங்களில் நாட்டில் கொரோனா வைரஸ் தொற்றின் வேகம் அதிகரித்துக் காணப்படுகின்றது. நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவருவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசாங்கம் மேற்கொண்டுவரும் நிலையில், பொதுமக்கள் அதற்கு முழுமையான ஒத்துழைப்பை வழங்குவது முக்கியமென்றும் அவர் தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

கடந்த புத்தாண்டுவிடுமுறை காலத்தில் மாகாணங்களுக்கிடையில் பயணத் தடைகளை மேற்கொண்டிருந்தால் மக்கள் சுற்றுலா பயணங்களை மேற்கொள்ளல் உள்ளிட்ட அநாவசியமான பயணங்களை தவிர்த்திருக்க வாய்ப்புண்டு.

அதேவேளை, சமய மற்றும் சுற்றுலா பிரதேசங்களில் மக்கள் அதிகளவில் கூடியுள்ளமையும் கவனத்திற் கொள்ளப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து மக்களை பாதுகாக்கும் வகையில் மே 31ஆம் திகதி வரை நடைமுறைக்கு வரும் வகையில் சுகாதார அமைச்சினால் புதிய வழிகாட்டல்கள் வெளியிடப்பட்டுள்ளன.

அதனை முழுமையாக பின்பற்றுவது மக்களின் பொறுப்பாகும். அதனைக் கணக்கிலெடுக்காமல் கடந்த விடுமுறையில் மக்கள் செயல்பட்டமையினாலேயே வைரஸ் பரவல் அதிகரிப்பு காணப்படுகின்றது- என்றார்.

அதேவேளை, கடந்த தமிழ் - சிங்கள புத்தாண்டுக்குப் பின் கொழும்பு, குருநாகல் மற்றும் கண்டி ஆகிய பிரதேசங்களிலிருந்து பெற்றுக்கொள்ளப்பட்ட மாதிரிகளில் புதிய வகை வைரஸ் இனங்காணப்பட்டுள்ளதாக ஸ்ரீஜெயவர்தன பல்கலைக் கழகத்தின் மருத்துவபீட நிபுணரான கலாநிதி சந்திம ஜீவந்தர தெரிவித்துள்ளார்.

அதற்கிணங்க பிரிட்டனில் பரவியுள்ள வைரஸ் இங்கு பரவுவதாக சந்தேகம் எழுந்துள்ளதாகவும் அவ்வாறில்லாவிட்டால் அது இலங்கையில் உருவான புதிய வகை வைரஸா என்பதை ஆராய்ச்சி செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் அவர் தெரிவித்தார். அதேவேளை, இந்தியாவில் பரவும் வைரஸ் இலங்கையில் காணப்படுவதாக எந்தவொரு தகவலும் கிடையாது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# கிளிநொச்சி இதுவரை பாதுகாப்பாக உள்ளது!

## அரச அதிபர் தெரிவிப்பு



கிளிநொச்சி, ஏப். 28

கிளிநொச்சி மாவட்டம் தற்போது வரை கொரோனா பாதிப்பிலிருந்து பாதுகாப்பான மாவட்டமாகவே இருக்கிறது. எனவே இந்த நிலைமையினை தொடர்ந்தும் பேணுவதற்கு

பொது மக்கள் சுகாதாரப் பிரிவினரின் ஆலோசனைகளை பற்றி நடந்துகொள்ளவேண்டும் என கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

நேற்று மாவட்ட செயலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்-

கிளிநொச்சி மாவட்டத்தில் எழுந்தமானதாக மேற்கொள்ளப்படுகின்ற பி.சி.ஆர். பரிசோதனைகளில் கிடைக்கப் பெறுகின்ற முடிவுகளின்படி மாவட்டத்தைச் சேர்ந்த எவருக்கும் தொற்று ஏற்பட்டுள்ளதாக இல்லை. வெளி மாவட்டங்களிலிருந்து

வருகின்றவர்களே தொற்று ஏற்பட்டுள்ளது. எனவே, மாவட்டம் ஓரளவுக்கு பாதுகாப்பாகவே உள்ளது. இருப்பினும் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி பொது மக்கள் நடந்து கொள்ளவதோடு, சுகாதார துறையின் ஆலோசனைகளின் படியும் செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றோம்- என்றார்.

# மன்னாரில் 2578 ஏக்கரில் சிறுபோக பயிர்ச்செய்கை

மன்னார், ஏப். 28

மன்னார் மாவட்டத்தில் 2578 ஏக்கரில் இம் முறை நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

2021 ஆம் ஆண்டுக்கான சிறு போக பயிர்ச் செய்கை மேற்கொள்வது தொடர்பான கலந்துரையாடல் நேற்று முற்பகல் 10.30 மணிக்கு மன்னார் உயிலங்குளம் விவசாய மாநாட்டு மண்டபத்தில் இடம் பெற்றது.

மன்னார் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ஏ.ஸ்ரான்லி டிமெல் தலைமையில் இடம் பெற்ற இந்த கூட்டத்தில் பிரதேச செயலாளர்கள், நீர்ப்பாசன திணைக்களம், விவசாயத் திணைக்களம், விவசாய அமைப்புக்களின் பிரதி நிதிகள் என பலர் கலந்து கொண்டனர்.

குறிப்பாக இலங்கையிலே மன்னார் மாவட்டத்தில் சிறு போக பயிர்ச் செய்கை புலவுகளின் கீழ் செய்யும் நடைமுறை காணப்படுகின்றது.

அதன் அடிப்படையில் இம்முறையும் நெற்பயிர்ச் செய்கையை எவ்வாறு மேற்கொள்ள முடியும் என்ற யோசனைகள் குறித்த கூட்டத்தில் பெற்றுக் கொள்ளப்பட்டது.

இதன்போது குறித்த கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானத்திற்கு அமைய 11 ஆம் , 12 ஆம், 13 ஆம் கட்டை பிரதான வாய்க்கால்கள், அடைக்கல மோட்டை பிரதான வாய்க்கால், சின்ன உடைப்பு பிரதான வாய்க்கால், பெரிய உடைப்பு பிரதான வாய்க்கால் என்பவற்றின் ஊடாக 2578 ஏக்கரில் இம் முறை நெற்பயிர்ச் செய்கையை மேற்கொள்ள தீர்மானிக்கப்பட்டுள்ளது.

மேலதிகமாக குருவில் வான் வாய்க்கால் ஊடாக 400 ஏக்கர் மேட்டு நில பயிர்ச் செய்கையை மேற்கொள்ளவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

(அ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# முகக்கவசம் அணியாதோர் மீது வவுனியாவில் கடும் நடவடிக்கை

வவுனியா,ஏப்.28
வவுனியாவில் முகக்கவசம் அணிந்து வீதிகளில் செல்லாமை, உரிய முறையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றத் தவறியவர்களுக்கு எதிராக பொலிஸார் கடுமையான நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

வீதிகளில் நடந்து செல்பவர்கள், மோட்டார் சைக்கிள்கள், வாகனங்கள் என்பனவற்றில் பயணிப்பவர்கள் உரிய முறையில் முகக்கவசம் அணிந்து செல்லாதவர்களுக்கு எதிராக நேற்றுக் காலையிலிருந்து பொலிஸார் விஷேட நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

இலங்கையில் கொரோனா மூன்றாவது அலை தாக்கத் தொடங்கியுள்ளதை அடுத்து சுகாதாரத் துறையினர் பொலிஸார் பல்வேறு நடவடிக்கையை மேற்கொண்டு வருகின்றனர்.

இதையடுத்து சுகாதார முறைகளை உரியமுறையில் பின்பற்றத் தவறியவர்களுக்கு எதிராக பொலிஸாரால் பெயர் விவரங்களை எழுதிய பின்னர் எச்சரிக்கையுடன் விடுவிக்கப்பட்டனர். (எ)

# ஈஸ்டர் தாக்குதல் சூத்திரதாரி கைது! அரசாங்கம் திருப்தி மக்கள் அதிருப்தி

## ஐ.ம.ச. எம்.பி. துஷார இந்துனில் சாடல்



கொழும்பு,ஏப்.28
**பேராயரையும் கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றும் வகையிலேயே உயிர்த்த ஞாயிறு தினத் தாக்குதலின் சூத்திரதாரி எனக்குறிப்பிட்டு ஒருவரைக் கைது செய்துள்ளனர். இதன் மூலம் நாட்டு மக்கள் திருப்தியடையவில்லை. மாறாக அரசாங்கம் மாத்திரமே திருப்தியடைந்துள்ளது என ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் துஷார இந்துனில் தெரிவித்துள்ளார்.**

கொழும்பில் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்றுச் செவ்வாய்க்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

உயிர்த்த ஞாயிறுதினத் தாக்குதலின் பிரதான சூத்திரதாரியெனக் கூறி ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார். இதில் அரசாங்கம் மாத்திரமே திருப்தியடைந்துள்ளது.

இதுதொடர்பில் கருத்துக்களைத் தெரிவிக்கின்ற பாராளுமன்ற உறுப்பினர்களான ஹரீன் பெர்னாண்டோ மற்றும் மனுஷ நாணயக்கார போன்றோரைக் கைது செய்ய முயற்சிக்கப்படுகிறது.

எவ்வித காரணமுமின்றி பாராளுமன்ற உறுப்பினர் ரிஷாத் பதியுதீன் கைது செய்யப்பட்டுள்ளார். பேராயரையும் கத்தோலிக்க மக்களையும் ஏமாற்றுவதற்காக இவ்வாறு செயல்படாமல் உண்மையான குற்றவாளிகளைக் கைது செய்ய நடவடிக்கை எடுக்குமாறு அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்.

இது இவ்வாறிருக்க, பொய்களைக்கூறி மக்களிடம் அதிகாரத்தைப் பெற்றுக்கொண்ட அரசாங்கம் தனது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதில் வெற்றி பெற்றுள்ளது. ஆனால், எதிர்பார்ப்புக்களுடன் இந்த அரசாங்கத்தை தெரிவு செய்த மக்கள் தோல்வியடைந்துள்ளனர்.

கொரோனா முதலாம் அலையின் போது நாட்டை முடக்குமாறு நாம் வலியுறுத்திய போது அதனைக் கவனத்தில் கொள்ளாத அரசாங்கம் நிலைமை தீவிரமடைந்ததன் பின்னரே அதற்கான நடவடிக்கையை முன்னெடுத்தது. இரண்டாம் அலை ஏற்பட்ட போதும் இதே நிலைமையே காணப்பட்டது. தமிழ் - சிங்கள புத்தாண்டின் போது முறையான கட்டுப்பாடுகளை விதிக்காமையால் தற்போது மூன்றாம் அலைக்கும் முகங்கொடுத்துள்ளோம் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (எ)

# கைதை தடுக்கக்கோரி ஹரீன் மனுத் தாக்கல்



கொழும்பு,ஏப்.28
ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோ, தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார்.

ஈஸ்டர் தாக்குதல் தொடர்பில் நடத்தப்படுகின்ற விசாரணைகளுக்காக வாக்குமூலம் பதிவு செய்ய வேண்டியுள்ளதால் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்துக்கு வருகை தருமாறு பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், ஹரீன் பெர்னாண்டோ உடல்நலக் குறைவு காரணமாக கொழும்பிலுள்ள தனியார் வைத்திய சாலையொன்றில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றார்.

இந்நிலையிலேயே ஹரீன் பெர்னாண்டோ தன்னைக் கைது செய்வதைத் தடுக்குமாறு கோரி உயர்நீதிமன்றில் அடிப்படை உரிமை மனுவொன்றைத் தாக்கல் செய்துள்ளார். (எ)

# இலங்கையில் பரவும் கொரோனா இந்தியாவின் மாறுபாடு இல்லை

## மருத்துவர் சந்திம ஜீவந்திர தெரிவிப்பு

கொழும்பு,ஏப்.28
இந்தியாவில் தற்போது பரவியுள்ள கொரோனா வைரஸின் மாறுபாடு இலங்கையில் பரவுகிறது என்பதற்கு உறுதியான ஆதாரங்கள் எதுவும் இல்லை என முதல்கட்ட ஆய்வுகளில் தெரியவந்துள்ளது. நாட்டில் பரவும் வைரஸின் மாற்றம் குறித்த முழுமையான விவரம் அடுத்த வாரம் வெளியாகும் என சிறி ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தின் ஒவ்வாமை நோய் எதிர்ப்பு மற்றும் உயிரியல் ஆய்வுகூட தலைவர் மருத்துவர் சந்திம ஜீவந்திர தெரிவித்துள்ளார்.

இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் வைரஸ் பரவ வாய்ப்புள்ளது. இருப்பினும், இது போன்ற சாத்தியத்தை குறைக்க சுகாதார அதிகாரிகள் அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் எடுத்துள்ளனர்.

நாட்டில் பரவி வரும் வைரஸ் ஒரு பிறழ்வுக்கு உட்பட்டது மற்றும் ஒரு புதிய மாறுபாடாக கூட இருக்கலாம் என முதல் கட்ட ஆய்வுகள் காட்டுவதாகவும் மருத்துவர் சந்திம ஜீவந்திர தெரிவித்தார்.

குறிப்பாக பண்டிகைக் காலத்துக்குப் பின்னர் கொழும்பு, குருநாகல் மற்றும் கண்டியிலிருந்து பெறப்பட்ட மாதிரிகளில் இந்த பிறழ்வை அவதானித்ததாகவும் அவர் குறிப்பிட்டார்.

தற்போது இலங்கையில் பரவிவரும் வைரஸ் வேகமாகப் பரவி வருவதாகவும், அதிகளவில் பரவக்கூடும் என்பதனால் மக்கள் சுகாதார வழிகாட்டுதல்களை அவசியம் பின்பற்றினால் வைரஸ் மேலும் பரவுவதைத் தடுக்க முடியும் என்றும் அவர் தெரிவித்தார். (எ)

## 4 மாத குழந்தை உட்பட

# ஒரே குடும்பத்தை சேர்ந்த 8 பேருக்கு கொரோனா

ஹற்றன்,ஏப்.28
பொகவந்தலாவை, கிவ் தோட்டத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த எட்டுப் பேருக்கு கொரோனா வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டது என பொகவந்தலாவ சுகாதார மருத்துவ அதிகாரி ஜெய்கணேஸ் தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவிலேயே இவ்வாறு தொற்று உறுதிப்படுத்தப்பட்டது என அவர் கூறினார்.

இவர்கள் அனைவரும் ஏற்கனவே தொற்றுக்குள்ளான குறித்த குடும்பத்தின் தந்தையுடன் நெருங்கிய தொடர்பைப் பேணியவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்தத் தொற்றுக்குள்ளான தந்தை பொகவந்தலாவை மோரா தோட்ட தனிமைப்படுத்தல் மத்திய நிலையத்தில் சிகிச்சை பெறுவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

ஏனைய 8 தொற்றாளர்களும் சித்திரைப் புத்தாண்டுக்காக கொழும்புக்கு சென்று வந்தவர்கள் என பொகவந்தலாவை சுகாதார மருத்துவ அதிகாரி தெரிவித்தார்.

இந்தத் தொற்றாளர்களில் நான்கு மாதக் குழந்தை ஒன்றும் 7 வயது சிறுவனும் அடங்குவதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

தொற்றாளர்கள் வசிக்கும் வீடு மற்றும் அவர்கள் சென்று வந்த இடங்களும் தோட்ட நிர்வாகத்தால் கிருமித் தொற்று நீக்கம் செய்யப்பட்டுள்ளது.

இதற்கு மேலதிகமாக நுவரெலியா பொகவந்தலாவ கெர்கர்ஸ்வோல்ட் தோட்டத்திலும் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது.

இதேவேளை, கொட்டகலை நகரிலும் பெண் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. நேற்று முன்தினம் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர். பரிசோதனை முடிவிலேயே தொற்று உறுதி செய்யப்பட்டது.

இவர் கொழும்பு பம்பலப்பிட்டி பகுதிக்குச் சென்று வந்துள்ளார் எனவும் விசாரணைகளின் மூலம் தெரியவந்தது. (எ)

# முன்பள்ளிகளுக்கும் விடுமுறை



கொழும்பு,ஏப்.28
நாட்டிலுள்ள சகல முன்பள்ளிகள் மற்றும் பிரிவெனா பாடசாலைகளை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி வரை இவ்வாறு முன்பள்ளிகள் மற்றும் பிரிவெனா பாடசாலைகளை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என கல்வி அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸ் தெரிவித்துள்ளார்.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இதேவேளை, நாட்டிலுள்ள சகல பாடசாலைகளையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மூடுவதற்கு அமைச்சரவை தீர்மானித்துள்ளது என அமைச்சரவை பேச்சாளர், அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்துள்ளார்.

அத்துடன் தனியார் கல்வி நிலையங்களையும் எதிர்வரும் 30 ஆம் திகதி வரை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என அவர் தெரிவித்தார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# துறைமுக நகர சட்டமூலம் நாட்டின் இறையாண்மைக்கு அச்சுறுத்தலா?

## அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் நேர்காணல்

● தமிழில் சேகு

துறைமுக நகர அபிவிருத்தி திட்டத்தின் ஊடாக நாட்டிற்கு 15 பில்லியன் அமெரிக்க டொலர் இலாபத்தை உழைக்க முடியும் என எதிர்பார்ப்பதாக நிதி, மூலதனச் சந்தை மறறும் அரச தொழில் முயற்சி மறுசீரமைப்பு இராஜாங்க அமைச்சர் அஜித் நிவாட் கப்ரால் தெரிவித்தார். சிங்கள நாளேடொன்றிற்கு வழங்கிய செவ்வியிலேயே அவர் இதனை தெரிவித்தார். அந்த செவ்வியின் முழு வடிவம் வருமாறு:

**கேள்வி:** கொழும்பு துறைமுக நகரம் உண்மையில் இலங்கைக்கா, சீனாவிற்கா சொந்தமானது?

**பதில்:** இலங்கைக்கு.

**கேள்வி:** அவ்வாறாயின் வேறாக ஆணைக்குழுவினால் நிர்வகிக்கவுள்ளமைக்கான காரணம் என்ன?

**பதில்:** நகர சபையின் ஊடாக நகரங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. மாகாண சபைகளின் ஊடாக வெவ்வேறு மாகாணங்கள் நிர்வகிக்கப்படுகின்றன. அதனைப் போன்று கொழும்பு துறைமுக நகரம் ஆணைக்குழுவின் ஊடாக நிர்வகிக்கப்படவுள்ளது. சிறிய பகுதி முதலீட்டுச் சபையினால் நிர்வகிக்கப்படும். அவ்வாறாக வெவ்வேறு நிறுவனங்களுக்கு கீழ் வெவ்வேறு பகுதிகள் நிர்வகிக்கப்படலாம்.



**கேள்வி:** துறைமுக நகரம் கொழும்பு மாநகர சபையின் ஊடாகவோ, மேல் மாகாண சபையினாலோ நிர்வகிக்கப்படாமைக்கான காரணம் என்ன?

**பதில்:** அவ்வாறு செய்தால் மாத்தரமே திறன் வாய்ந்த முறையில் இந்தத் திட்டத்தை முன்னெடுத்து செல்லமுடியும். நகர சபைக்கு ஒரு வேலைக்காகச் சென்றால் எத்தனை கடினமாக உள்ளது என நாம் அறிவோம் அல்லவா? எவ்வளவு சிக்கல் நிலைமை காணப்படுகின்றது. பெரிய முதலீட்டாளர்கள் நாட்டிற்கு வரும் போது இத்தகைய கடினமான நிலைமையை எதிர்கொள்ள விரும்ப மாட்டார்கள். சிங்கப்பூர், டுபாய் போன்ற நாடுகளில் முதலீட்டாளர்களைக் கவர்வதற்காக உரிய ஏற்பாடுகள் செய்து கொடுக்கப்பட்டுள்ளது. ஒரு மணி நேரத்தில் அதற்கான அனைத்து விடயங்களையும் அந்த நாடுகளில் செய்து கொள்ள கூடிய நிலைமை காணப்படுகின்றது. இந்நிலையில், அத்தகைய திறன் வாய்ந்த முறைமைகள் வேறு நாடுகளில் காணப்படும் நிலைமையில் தான் நாம் முதலீட்டாளர்களை போட்டியின் மத்தியில் கவரவேண்டிய நிலைமை காணப்படுகின்றது. ஆகவே, தான் இந்த சட்டமூலத்தை நாம் தயாரித்துள்ளோம். அதில் எந்த பகுதியிலும் குறித்த பகுதி எமது நாட்டிற்கு உரியது அல்ல என குறிப்பிடப்படவில்லை. ஆகவே ஏனைய நாடுகளுடன் போட்டியிடுவதற்கு ஏதுவான திறன்வாய்ந்த முறைமையை கையாள்வதே எமது நோக்கமாகவுள்ளது.

**கேள்வி:** கடந்த 2018 ஆம் ஆண்டில் நல்லாட்சி அரசாங்கம் துறைமுக நகரை துறைமுக நகர அபிவிருத்தி அதிகார சபையின் கீழ் நிர்வகிகத்தது. அது அவ்வாறு இருக்ககையில் எதற்காக இந்த அரசாங்கத்தின் கீழ் குறித்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது?

**பதில்:** அமைச்சுக்களின் ஊடாக ஒரு வேலையைச் செய்து முடிக்க எவ்வளவு காலதாமதம் ஏற்படுகின்றது எனப் பாருங்கள். ஒரு கடித்தை பெற்றுக்கொள்வதற்காக எவ்வளவு கால தாமதம் ஏற்படுகின்றது.

**கேள்வி:** அத்தகைய நிலைமையை நீக்கினால் சரியாக கொண்டு செல்ல முடியும் அல்லவா?

**பதில்:** அந்த நிலைமையை முடிவுக்கு கொண்டுவருவதற்கு எவ்வளவு காலம் எடுக்கும் எனத் தெரியவில்லை. பாராளுமன்றத்தில் குறித்த விடயம் தொடர்பில் ஆராயப்படுகின்றது. ஜனாதிபதிக்கு இது தொடர்பில் பொறுப்பு கூறவேண்டும். அந்த வகையில் அவர்களுக்கு 729 ஏக்கர் நிலப்பரப்பை கையளித்து நாம் அதனை பொறுப்புடன் பார்த்துக்கொள்கின்றோம். இதன் ஊடாக அடுத்த வருடத்தில் 15 பில்லியன் அமெரிக்க டொலரை இந்த திட்டத்தின் ஊடாக பெற்றக்கொள்ள முடியும் என எதிர்பார்க்கின்றோம். அதன் ஊடாக வேலைவாய்ப்புக்களை ஏற்படுத்தவுள்ளோம். துறைமுக நகரின் நிர்மாண பணிகள் விரைவில் நிறைவடையும் என நாம் எதிர்பார்க்கின்றோம். அவர்களின் ஊடாக நாம் இலாபத்தை பெற்றுக்கொள்வதாயின் அதற்கு ஏதுவான வழிவகைகளை அவர்களுக்கு நாம் ஏற்படுத்தி கொடுக்க வேண்டியது அவசியமானதாகும். அதன்காரணமாகவே நாம் தனியாக குழுவொன்றை அமைத்துள்ளோம்.

**கேள்வி:** குறித்த விசேட குழுவின் ஊடாக சர்வதேச ஒப்பந்தங்களை மேற்கொள்ள முடியும். அவ்வாறாயின் அது நாட்டின் இறையாண்மைக்கு பாரிய அச்சுறுத்தல் நிலைமை அல்லவா?

**பதில்:** வெளிநாட்டு உடன்படிக்கைகள் என்பது அவர்கள் வர்த்தக உடன்படிக்கைகளில் மாத்திரமே அவர்கள் கையொப்பமிடுவர். ஏதேனும் ஒரு நிறுவனத்திற்கு வழங்கும் வரிச்சலுகை, அந்த நிறுவனத்திற்கு செய்யவுள்ள விடயங்கள் தொடர்பான தீர்மானங்களை எடுத்தல், எவரேனும் ஒருவருக்கு தண்டனை வழங்கல், பொதுமன்னிப்பளித்தல் உள்ளிட்ட அதிகாரங்கள் ஆணைக்குழுவிற்கு இல்லை. மாறாக அவர்களுக்கு முதலீடு தொடர்பான அதிகாரமே உள்ளது. அந்த வலயத்தினுள் பதிவு செய்பவர்களுக்கு தேவையான வசதிகளை ஏற்படுத்திக்கொடுக்கும் பொறுப்பு மாத்திரமே ஆணைக்குழுவிற்கு உள்ளது. வேறு செயல்களை புரிவதற்கான அதிகாரம் அவர்களிடம் இல்லை.

**கேள்வி:** மாகாண சபைக்கு பொலிஸ் அதிகாரம் உள்ளது. அவ்வாறாக அதிகாரத்தை இந்த ஆணைக்குழு கேட்டால் எதிர்காலத்தில் நாட்டிற்கு என்ன நேரும்?

**பதில்:** பொலிஸாருக்கான அதிகாரங்கள் அரசாங்கத்தின் கீழேயே உள்ளன. யாராயினும் ஒரு நபர் திருட்டு செய்தால் அதனை இந்த ஆணைக்குழு பார்த்துக் கொள்ளாது. அவ்வாறான செயல்பாடுகள் இலங்கை பொலிஸாரினாலேயே மேற்கொள்ளப்படும். அவை எதுவும் மாற்றமடையப் போவதில்லை. அதுதொடர்பில் பொய்யான கருத்துக்களை கூறவேண்டிய அவசியம் எமக்கு இல்லை. ஆனால் சிலர் இதன் ஊடாக வேறு இராச்சியம் உருவாக்கும் என்ற வகையிலான கருத்துக்களை முன்வைக்கின்றனர். அவ்வாறான விடயம் எதுவும் இடம் பெறாது என்பதை பொறுப்புடன் கூறிக்கொள்ள விரும்புகின்றோம்.

**கேள்வி:** இந்த ஆணைக்குழுவிற்கு ஜனாதிபதியின் அதிகாரங்கள் வழங்கப்படுகின்றன. இது அரசியலமைப்பிற்கு விரோதமான விடயமாகும்?

**பதில்:** இப்பொழுது ஜனாதிபதியிடம் அதிகாரமுள்ளது. முழு நாடும் ஜனாதிபதியை நியமித்த பின்னர் அவரிடம் சில அதிகாரங்கள் உள்ளன. அதில் ஒன்றுதான் நீதிபதிகளை நியமிப்பதாகும். சரியான நபர்களுக்கு குறித்த அதிகாரங்களை வழங்க வேண்டும். அந்த அதிகாரம் ஜனாதிபதியிடம் வழங்கப்பட்டுள்ளது. தூதுவர்களை நியமிக்கும் அதிகாரம் அவருக்குள்ளது. அமைச்சுக்களின் செயலாளர்களை நியமிக்க முடியும். மஹிந்த ஜனாதிபதியாக இருந்த போது 2005இல் கோட்டாபய ராஜபக்ஷவை பாதுகாப்பு செயலாளர் ஆக்கினார். என்னையும் செயலாளராக நியமித்தார். நாம் அரச சேவையில் இருக்கவில்லை. ஆயினும் நாம் அந்த விடயதானங்கள் தொடர்பில் அனுபவம் பெற்றிருந்ததினால் அவரால் எம்மை நியமிக்க கூடியதாகவிருந்தது. அந்த வகையில் ஜனாதிபதிக்கு அதிகாரங்கள் காணப்படுகின்றன. முதலீட்டு சபையின் அனைத்து உறுப்பினர்களையும் ஜனாதிபதியே நியமிப்பார்.



**கேள்வி:** என்னுடைய கேள்வி ஆணைக்குழுவிற்கு அந்த அதிகாரங்களை வழங்குவது அரசியலமைப்பிற்கு விரோதமானது என்பதாகும்?

**பதில்:** இல்லை. இந்த ஆணைக்குழுவின் உறுப்பினர்கள் ஆறுபேர் நியமிக்கப்படுவது அவர்களுடைய தகுதி அடிப்படையிலாகும். அந்த தகுதி அடிப்படை குறித்த வரைவில் உள்ளடக்கப்பட்டுள்ளது. அந்த தகுதி உடையவர்களை ஜனாதிபதியால் நியமிக்க முடியும். அது எந்த நாட்டினுடைய ஜனாதிபதியும் செய்யும் செயலாகும். சுருக்கமாக கூறினால் அமெரிக்காவில் அமைச்சர்களை ஜனாதிபதியே நியமிக்கின்றார். விடயதானங்கள் தொடர்பில் அனுபவம் படைத்தவரை ஜனாதிபதி நியமிக்க முடியும். ஜனாதிபதி ஒருவரை நியமித்து அவருக்கு வழங்கும் அதிகாரங்களே அவைகளாகும்.

**கேள்வி:** துறைமுக நகரில் இருப்பவர்களுக்கு விசேட வரப்பிரசாதங்கள் வழங்கப்படுவதுடன், அவர்களுக்கு வரிச்சலுகையும் வழங்கப்படுகின்றது. அப்படியெனின் இது தனி நாடு அல்லவா?

**பதில்:** வெளிநாட்டின் நிதியின் ஊடாக முதலீடு இடம் பெறுகின்றமையின் காரணமாகவே வரிச்சலுகை வழங்கப்படுகின்றது. நாட்டை அபிவிருத்தி செய்யும் போது நுற்றுக்கு 6 வீதத்திற்கும் அதிகமான பொருளாதார வளர்ச்சியை பெற வேண்டுமாயின் முதலீட்டை செய்வதற்கு ஏதுவான வழிவகைகளை ஏற்படுத்திக்கொடுக்க வேண்டும். தற்பொழுது வரை அபிவிருத்தி இடம் பெறுகின்றது. இருப்பினும் அந்த அபிவிருத்தியானது மிகவும் குறைந்த வேகத்திலேயே இடம்பெறுகின்றது. ஆகவே , நுற்றுக்கு இரண்டு வீத வேகத்தில் அபிவிருத்தி அடைய வேண்டியது அவசியமானதாகும். அது தவிர, வேகமாக வளர்ச்சியை பெற்றுக்கொள்ள வேண்டுமாயின் வெளிநாடுகளிலிருந்து நிதியைப் பெற்றுக்கொள்ள வேண்டிய நிலைமை காணப்படுகின்றது. அதன் காரணமாகவே நாம் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கு நாட்டை திறந்துள்ளோம்.

**கேள்வி:** துறைமுக நகரின் சம்பளம் யுவானின் ஊடாக செலுத்தப்படவுள்ளது. இது அரசியலமைப்பை மீறும் செயலாகும்?

**பதில்:** இல்லை. அவ்வாறு இடம் பெறாது. வெளிநாட்டு பணத்தை பெற்றுக்கொள்வதற்காக எமது நாட்டவர்கள் வெளிநாடுகளுக்கு செல்கின்றனர். காரணம் அந்த நாடுகளின் பணப்பெறுமதியில் சம்பளம் எடுத்து எமது நாட்டிற்கு கொண்டுவரும் போது அதன் பெறுமதி அதிகமாகின்றது. அவ்வாறானதொரு நிலைமையை வெளிநாடு செல்லாது எமது நாட்டிலேயே ஏற்படுத்தக்கூடிய நிலைமை இதன் ஊடாக ஏற்படுகின்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# இரண்டாவது அலை இந்தியாவை இப்படி தாக்குவது ஏன்?

பாரிஸிலிருந்து
**குமாரதாஸன்**

டில்லி சட்டமன்ற உறுப்பினர் பரத்வாஜ் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டிருந்த நிலையில் உதவி கோரி ருட்டர் செய்தி ஒன்றை வெளியிட்டிருந்தார்.

“.. பெரும் எண்ணிக்கையானோர் இங்கே ஒட்சிசனில் தங்கியிருக்கிறார்கள். அது கிடைக்காவிட்டால் தண்ணீர் இன்றி மீன்கள் இறப்பது போன்று மரணங்கள் நிகழும். இன்னமும் மூன்று மணி நேரங்களுக்குத் தேவையான ஒக்சிஜன் மட்டுமே இங்குள்ளது....”

அவர் கூறியது போன்று இந்திய மருத்துவ மனைகளில் நீரின்றி மீன்கள் இறப்பது போல மனிதர்கள் மடிந்து கொண்டிருக்கிறார்கள்.

“இந்த முறை தொற்று மிக வேகமாக இருக்கிறது. மருந்து எடுப்பதற்கு அவகாசம் இல்லை. வைரஸ் பரிசோதனை செய்து அறிக்கை கிடைப்பதற்கு முன்னரே பலர் உயிரிழக்கின்றனர்.”

இந்தியாவில் கட்டுமீறியுள்ள வைரஸ் நிலைவரம் குறித்து மருத்துவர் எஸ். கே.பாண்டே (Dr. S K Pandey) என்பவர் அசோசி யேட்டட் பிரஸ்(AP) செய்திச் சேவையிடம் இவ்வாறு கூறியிருக்கிறார்.உத்தரப் பிர தேச மாநிலத்தின் தலைநகர் லக்னோ வில் உள்ள ராம் மனோகர் லோஹியா மருத்துவ விஞ்ஞான நிலையத்தைச் (Ram Manohar Lohia Institute of Medical Sciences) சேர்ந்தவர் டாக்டர் பாண்டே.

இந்தியாவில் வைரஸ் திரிபுகள் பரவுகி வேகமும் எண்ணிக்கையும் இவரைப் போன்ற பல மருத்துவர்களையும் அறிவியலாளர்களையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தி விட்டுள்ளது. தொற்று நோயியலாளர்கள் சிலர் “இது ஒரு புரியாத புதிர்” என்கின்றனர்.

குடும்பத்தில் ஒருவரைப் பீடித்து மறுநாளிலேயே வீட்டில் அனைவருக்கும் தொற்றிக் கொள்கிறது. கடும் வயிற்றோட்டம், சத்தி போன்ற புதிய அறிகுறிகள் இளவயதினரிடையே பரவலாகத் தோன்றுகின்றன. தொண்டை மற்றும் மூக்குப் பகுதிககளில் கண்டறிவதற்கு முன்பாகவே வைரஸ் விரைந்து நுரையீரலைத் தாக்கி விடுகின்றது.

டில்லி மருத்துவர் ஒருவர் இத்தகவல்களை உறுதிப்படுத்துகிறார்.

ஒட்சிசன் தீர்ந்து போன மருத்துவமனைகளில் இருந்து தங்கள் அன்புக்குரியவர் களைத் தூக்கிக் கொண்டு உயிர்ப்பிச்சை கேட்டு எல்லா ஆஸ்பத்திரிகளுக்கும் அலைந்து கொண்டிருப்பவர்களை எங்கும் காண முடிகிறது.

“கொரோனா வைரஸ் என்னவெல்லாம் செய்யும் என்பதை இந்திய நிலைவரம் உணர்த்துகின்றது” என்று கூறி உலக சுகாதார நிறுவனம் உலக நாடுகளை எச்சரித்திருக்கிறது. அரசுகள் அவசரமாக சுகாதாரக் கட்டுப்பாடுகளைத் தளர்த்துவ தும், பொதுமக்கள் ‘மாஸ்க்’ அணிவது போன்ற சுகாதாரப் பழக்கவழக் கங்களை கைவிடுவதும் எத்தகைய ஆபத்துகளு க்கு இட்டுச்செல்லும் என்பதற்கு இந்தியாவை உதாரணமாகக் காட்டுகின்றது மருத்துவ உலகம்.

**இந்தியர்கள் எவருமே எதிர்பாராத**
**இந்த அவலம் ஏன் அங்கு உருவானது?**

அரசியல் நோக்குடன் குற்றங்களை முன் வைப்போர், அறிவியல் ரீதியில் விவாதிப் போர் என இரண்டு பக்கத்தில் வாதங்கள் முன்வைக்கப்படுகின்றன.

தலைநகர் உட்பட இந்திய நகரங்களில் கடந்த சில மாதகாலமாக விவசாயிகள் திரண்டு நடத்திய பேரணிகள், பல லட்சம் பக்தர்கள் கலந்து கொண்ட கும்பமேளா சமயப் பண்டிகை, முக்கிய மாநிலங்க ளில் ஆளும் கட்சி உட்பட அரசியல் கட்சிகள் மக்களைத் திரட்டி நடத்திய தேர்தல் பரப்புரைக் கூட்டங்கள் போன்ற- சுகாதார விதிகள் அறவே அலட்சியம் செய்யப்பட்ட - சம்பவங்களைச் சுட்டிக்காட்டுவோர், வைரஸ் பரவல் இந்தளவுக்கு வேகமடை ந்தமைக்கு பொறுப்பற்ற இத்தகைய நட வடிக்கைகளே காரணம் என்று கூறுகின்றனர்.

ஆபத்தான இரட்டைத்திரிபு வைரஸ் பரவி வருவது தெரிந்துகொண்டும் சமூக இடை வெளி, மாஸ்க் என எதுவும் இன்றி பல லட்சக் கணக்கானோர் வட இந்திய நகரமான ஹரித்துவாரில் கங்கை நதி ஓரம் திரண்டு தங்கள் பாவங்களைக் கழுவுகின்ற இந்து சமயச்சடங்கை நிறைவேற்றினர்.

கும்பமேளா மதச் சடங்கு நடைபெற்ற ஹரித்துவாரா நகரில் இருந்து திரும்பிய பிரபல ஹிந்தி இசையமைப்பா ளர் ஷ்ரவன் ரத்தோட் (Shravan Rathod) சில தினங்களில் வைரஸ் தொற்றுக்கு இலக்காகிப் பின்னர் உயிரிழந்தார்.

பிரதமர் நரேந்திர மோடி, உள்துறை அமைச்சர் அமித் ஷா மற்றும் எதிர்க்கட்சி அரசியல்வாதிகள் போன்றோர் பல்லாயிரக்கணக்கான தங்கள் ஆதரவாளர்களுடன் நடத்திய தேர்தல் பிரசாரப் பேரணிகளில் சமூக இடைவெளி, மாஸ்க் என்று எதனையும் காணமுடியவில்லை.

தொற்றும் தன்மை மிக அதிகமாக உள்ள இரட்டைத் திரிபு வைரஸ் பரவிவருவது தெரிந்தும் பொது இடங்களிலும் தேர்தல் பரப்புரைகளிலும் மக்கள் கூடுவதைக் கட்டுப்படுத்தத் தவறியமையே தற்சமயம் வைரஸ் தொற்று சுனாமி போன்று தாக்குவதற்கு வழி வகுத்தது என்று குற்றஞ்சாட் டும் குரல்கள் எழுந்துள்ளன.

ஒப்பீட்டளவில் சுகாதாரக் கட்டமைப்புகள் சிறப்பாக இருந்த டில்லி போன்ற நகரங்க ளின் மருத்துவமனைகள் கூட நிலை குலையும் கட்டம் ஏற்பட்டிருப்பது கிராமப் புறங்களின் கதி என்ன என்பதை உணர் த்தப் போதுமானது. டில்லி கங்கா ராம் மருத்துவமனையில்(Sir Ganga Ram Hosp ital) 25 வைரஸ் நோயாளிகள் ஒக்சிஜன் இன்றி உயிரிழந்தனர் என்பதை பி. ரி. ஐ. செய்தி நிறுவனம் உறுதி செய்துள்ளது.

நாட்டின் தொலைதூரப் பகுதிகளுக்கு ஒக்சிஜன் விநியோகிப்பதற்கு இராணுவ விமானங்களையும் ரயில்களையும் அரசு ஈடுபடுத்திவருகிறது. பல நாடுகள் இந்தியாவுக்கு உதவ முன்வந்துள்ளன. இந்தியாவுக்கு எந்த வகையில் உதவுவது என்பது குறித்து ஆராய்ந்து வருவதாக அமெ க்கா தெரிவித்துள்ளது.

ஐரோப்பா, அமெரிக்கா போன்ற வளர்ந்த நாடுகளே இரண்டாவது, மூன்றாவது அலைகளைச் சமாளிக்கத் திணறி வருகின்றன. அது தெரிந்தும் கூட இந்தியா, இலங்கை போன்ற நாடுகள் முதலாவது அலையோடு எல்லாம் முடிந்து விடும் என்ற மனநிலையில் இருந்தனவா என்ற கேள்வியைச் சிலர் எழுப்புகின்றனர்.

நிலைமையை அறிவியல் ரீதியாக மதிப்பிடுவோர் வேறு கருத்துக்களை முன்வைக்கின்றனர்.

தடுப்பூசி ஏற்றுவது ஒருபுறம் நடந்தாலும் இந்தியச் சனத் தொகை ‘மந்தை எதிர்ப் புச்சக்தி’ என்ற ஒட்டுமொத்த நோய்க் காப்பைப் பெறுவதற்கு இன்னும் சிலபல காலம் செல்லக்கூடும் என்பதால் அதற்குள் மேலும் மோசமான தொற்று அலைகள் நாட்டைத் தாக்கலாம் என்கின்றனர்.

உலகில் இரண்டாவது பெரிய சனத்தொ கை கூடிய நாடு(1.3 பில்லியன்) என்ற வகையில் வைரஸ் திரிபுகள் மக்கள் சமூகங்கள் மத்தியில் புதிது புதிதாக உருவெடுக்கக் கூடிய வாய்ப்புகள் இந்தி யாவில் அதிகம் என்று நோயியலாளர்கள் கருதுகின்றனர். மிக அடர்த்தியான சனத் திரள்களிடையே நீண்ட காலம் பரவுகின்ற போதுதான் வைரஸ் தன்னைத் தக்க வைப்பதற்காகப் பல புதிய மரபு மாற்றங் களை எடுக்கின்றது. இது ஓர் இயற்கை யான உயிரியல் பண்புதான்.

பிரேசில், தென்னாபிரிக்கா போன்ற நாடுகளில் கண்டறியப்பட்ட வலுவான வைரஸ் திரிபுகளின் தன்மை கொண்ட இரட்டைத் திரிபும் அதனைத் தொடர்ந்து மூன்று மரபுகளை வெளிப்படுத்துகின்ற “முத்திரிபு” வைரஸ் கிருமியும் இந்திய மாநிலங்களில் பரவுவது உறுதிசெய்யப்பட்டுள்ளது. ஆனால் இன்றைய அவல நிலைக்கு வைரஸ் திரிபுகள் மட்டும் அல்ல பொறுப்பற்ற செயல்களும்தான் காரணம் என்று சர்வதேச உயிரியல் நிபுணர் டாக்டர் ஆனந்த் பன் (Dr Anant Bhan) தனது ருவிட்டர் பதிவில் கருத்திட்டுள்ளார்.

“தொற்று திடீரென அதிகரித்தமைக்கு வைரஸின் புதிய திரிபுகளோ மாறுபாடு களோ காரணம் அல்ல. மக்களின் பொதுச் சுகாதார விடயங்களில் முடிவுகளை எடுப்போரின் திறமையின்மை, பொறுப்பின்மை போன்ற திரிபுகளே இந்த நிலைமைக்குக் காரணம்” - என்று அவர் தனது பதிவில் குறிப்பிடுகிறார்.

இந்தியா போன்ற சன நெருக்கடி நிறைந்த நகரங்களையும் கீழ் நிலை சுகாதார வசதிகளையும் கொண்ட ஒரு நாட்டில் கொரோனா விதிகளைப் பேணுவதற்கு மக்களைக் கட்டாயப்படுத்தினாலும் தர்க்கரீதியில் அதற்கு வாய்ப்பு இல்லை என்று வேறு சிலர் கூறுகின்றனர்.

“சுகாதார விதிகளைப் பேணுமாறு இந்தியர்களை இறுக்க முடியாது. நகரங்களில் ஓர் அறைக்குள் ஆறுபேர் என்ற கணக்கில் வசிப்போரிடம் சமூக இடைவெளியை எங்கனம் பேணுவது?”

“.. சுமார் நூற்று முப்பது கோடி இந்திய மக்களையும் இரண்டு மீற்றர் தள்ளி இடைவெளியில் நிற்கச் சொன்னால் அவர்கள் அவ்வாறு நிற்பதற்கு முழு உலகமும் தேவைப்படும்”. இத்தகைய கருத்துக்களும் நிராகரிக்க முடியாதவைதான்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புலமைச் சிகரம்

**ஆண்டு 5 புலமைப் பரிசில் மாணவர்களுக்கான வழிகாட்டி** 52

**2008 39**

வண்ண வண்ண பூக்கள் எங்கும் மகிழ்வுடன் பாடல் இசைப்பதைக் கேளீர் கொத்துக் ........... மலர்ந்து பொலியும் சிறகடித்து எழுந்து அங்கும் இங்கும் இக்காட்சிதனைக் காணக் களிப்புடன் வாரீர்
வெற்றிடத்திற்குப் பொருத்தமான ஒரு சொல்லு கொத்தாய்
எனவே சரியான விடை கொத்தாய் என்பதாகும்.
சந்தோசமாக என்னும் கருத்தைத் தரும் இரு சொற்களும்
வண்ண வண்ண பூக்கள் எங்கும் மகிழ்வுடன் பாடல் இசைப்பதைக் கேளீர்

அங்கும் இங்கும் இக்காட்சிதனைக் காணக் களிப்புடன் வாரீர் செல்வதைப் பாரீர்

எனவே சரியான விடை மகிழ்வுடன் களிப்புடன்

**2011 37**

அமலன், கமலன், சமன் ஆகிய மூன்று நண்பகர்களதும் தங்கைகள் மூவரும்
கீதா, ராணி, சீதா
அமலனின் தங்கை அமர்ந்திருக்கிறார்.
கமலனின் தங்கை கீதா அல்ல எனின்,
சமனின் தங்கை யார்?
1.கீதா 2. ராணி 3. சீதா

எனவே சரியான விடை 3. சீதா

**2013 30**

அருணன் இந்திரனிலும் உயரங் கூடியவன்.
சந்திரன் அருணனிலும் உயரம் குறைந்தவன்.
இதற்கேற்ப சரியான கூற்று
2. இந்திரன், சந்திரன் ஆகிய இருவரிலு் உயரங் கூடியவர் எவரெனக் கூறுதல் கஷ்டம்

எனவே சரியான
விடை 2 காரணம் தரவுகள் போதாது.

இலங்கையில் உள்ள நீர் வீழ்ச்சிகளில்
தியலும நீர்வீழ்ச்சி துன்கிந்த நீர் வீழ்ச்சியிலும் பார்க்க உயரம் கூடியது.
எனவே உயரம் குறைந்த நீர்வீழ்ச்சி
லக்சபான நீர் வீழ்ச்சி தியலும நீர்வீழ்ச்சியிலும் பார்க்க உயரம் கூடியது.
லக்சபான நீர் வீழ்ச்சி உயரம் கூடியது.

இம் மூன்று நீர் வீழ்ச்சிகளில் உயரம் குறைந்த நீர்வீழ்ச்சியும் உயரம் கூடிய நீர்வீழ்ச்சியும் முறையே இடம்பெறும் விடையைத் தெரிவுசெய்க.

எனவே சரியான விடை

3. துன்கிந்த, லக்சபான

**ஆசிரியர் அன்னமையா - 076 056 5786**

# கொரோனா கட்டுப்படுத்தலில் இலங்கை அரசு முன்னேற்றம்!

## ஐ.நாவிடம் பிரதமர் எடுத்துரைப்பு



**கொழும்பு,ஏப்.28**

**கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்துவதில் இலங்கை அரசாங்கம் குறிப்பிடத்தக்க முன்னேற்றம் கண்டுள்ளது என ஐக்கிய நாடுகள் சபையிடம் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**

ஆசிய மற்றும் பசுபிக் நாடுகளுக்கான ஐக்கிய நாடுகளின் பொருளாதார மற்றும் சமூக ஆணையத்தின் 77ஆவது அமர்வின் தொடக்கப் பிரிவில் உரையாற்றியபோதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானவர்களைக் கண்டறிதல், தொடர்புத் தடமறிதல், தனிமைப்படுத்தல் மற்றும் நோயாளிகளுக்கு வழங்கப்படும் சிகிச்சை மூலம் இலங்கை மிகக்குறைந்த இறப்பு வீதத்தையும், அதிக மீட்பு வீதத்தையும் பதிவு செய்துள்ளது.

அரசாங்கம் கிட்டத்தட்ட ஒரு இலட்சம் இலங்கையர்களைத் திருப்பி அனுப்பியதுடன், பெப்ரவரியில் தடுப்பூசித் திட்டத்தைத் தொடங்கியது என்றும் கூறினார்.

தொற்று நோய்களின்போதுகூட, பல துறைகளில் பொருளாதார நடவடிக்கைகள் தொடர்ந்தன. ஏற்றுமதித்துறை தொடர்ந்து செயல்பட்டு வந்ததுடன், ஜனவரி மாதத்தில் சுற்றுலா மீண்டும் தொடங்கியது.

இலங்கை மத்திய வங்கி கொள்கை விகிதங்களைக் குறைத்து பல சலுகை மறு நிதியளிப்புத் திட்டங்களைச் செயல்படுத்தியது.

நிலையான அபிவிருத்தி இலக்குகளை அடைவதற்கு அரசாங்கம் உறுதிபூண்டுள்ளது எனவும் பிரதமர் குறிப்பிட்டார்.

இலங்கை தனது பிராந்திய உறவுகளை வலுப்படுத்துவதில் ஆர்வமாக இருப்பதாகவும், தென்-தெற்கு ஒத்துழைப்பை துரிதப்படுத்த வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்துவதாகவும் பிரதமர் கூறினார். (எ)

# சர்வாதிகார போக்கில் இனி யாரும் செயல்பட முடியாது

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் எதிர்ப்பு



அம்பாந்தோட்டை, ஏப்.28

நாட்டில் முதல்கட்டமாக அஸ்ரா செனேகா தடுப்பூசிகளைப் பெற்றுக் கொண்டவர்களுக்கு இரண்டாம் கட்டத் தடுப்பூசிகளை வழங்குவதற்குப் பதிலாக, அரசாங்கத்தை விமர்சிப்பவர்களைக் கைது செய்வதற்கான நடவடிக்கை மாத்திரமே தற்போது முன்னெடுக்கப்படுகின்றது.

ஜனநாயக நாடான இலங்கையில் கருத்து சுதந்திரத்தை ஒழிக்கும் வகையில் சர்வாதிகாரப் போக்கில் இனிமேல் யாரும் செயல்பட முடியாது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அம்பாந்தோட்டையில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் அவர் இவ்வாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

12 இலட்சம் அஸ்ராசெனகா தடுப்பூசிகளை கொள்வனவு செய்து அவற்றை 9 இலட்சம் பேருக்கு முதல்கட்டமாக வழங்கிய போதிலும், தற்போது இரண்டாம் கட்டமாக வழங்குவதற்கான வேலைத்திட்டங்கள் முறையாக முன்னெடுக்கப்படவில்லை. மக்களுக்கு தடுப்பூசி வழங்குவதற்குப் பதிலாக அரசாங்கத்தை விமர்சிப்பவர்களைக் கைது செய்ய நடவடிக்கை எடுத்துக் கொண்டிருக்கின்றனர்.

அத்தோடு இவ்வாறு கருத்து வெளியிடுபவர்களின் சமூக வலைத்தள கணக்குகளும் முடக்கப்படுகின்றன.

இலங்கை ஒரு ஜனநாயக நாடாகும். இங்கு சகலருக்கும் கருத்துச் சுதந்திரம் காணப்படுகின்றது. அதனை ஒழிக்கும் வகையில் சர்வாதிகாரப் போக்கில் எவருக்கும் செயல்பட முடியாது.

நாம் பழிவாங்கும் அரசியலைக் கற்கவில்லை. மக்களின் நலனுக்காகச் செயல்படுகின்ற சுபீட்சமான நாட்டை உருவாக்கும் அரசியலையே நாம் கற்றுள்ளோம். மக்களின் பிரச்னைகளுக்குத் தீர்வு வழங்கப்பட வேண்டும்- என்றார். (எ)

# தனிமைப்படுத்தலை மீறிய மேலும் 108 பேர் கைதாகினர்

கொழும்பு,ஏப்.28

நேற்றுக்காலை 6 மணியுடன் நிறைவடைந்த கடந்த 24 மணித்தியாலங்களில் மாத்திரம் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 108 பேர் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

அவர்களுள் அதிகமானவர்கள் களுத்துறை மாவட்டத்தைச் சேர்ந்தவர்கள் எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இதனடிப்படையில் தனிமைப்படுத்தல் சட்டத்தை மீறிய 3,755 பேர் இது வரையில் கைது செய்யப்பட்டனர் என பொலிஸார் தெரிவித்தனர்.

2020 ஆம் ஆண்டு ஒக்ரோபர் மாதம் 30 ஆம் திகதி முதல் இதுவரையான காலப் பகுதியில் இந்த நபர்கள் கைது செய்யப்பட்டனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

(எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ். மாவட்டத்தை முடக்கும் தீர்மானம் இதுவரை இல்லை

## அரச அதிபர் மகேசன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம்,ஏப்.28



**கொரோனா வைரஸ் தொற்றுத் தாக்கம் அதிகரித்துள்ள போதும் தற்போதைய நிலையில் யாழ். மாவட்டத்தை முடக்கும் தீர்மானம் எதுவும் எடுக்கப் படவில்லை என அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்துள்ளார்.**

யாழ். மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

தொடர்ந்து முன்னெடுக்கப் பட்டுவரும் எழுமாறான பி.சி.ஆர். பரிசோதனைகளின் பிரகாரம் நேற்றுமுன்தினம் 13 பேருக்கு தொற்று இனங்காணப் பட்டது. அந்த வகையிலே ஒக்ரோபர் மாதத்துக்குப் பிறகு 1,201 பேருக்கு யாழ்.மாவட்டத்தில் கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டது. இதில் 708 பேர் பூரண குணமடைந்து வீடு திரும்பினர்.

யாழ்.மாவட்டத்தில் இது வரை 19 கொரோனா மரணங்கள் பதிவாகியுள்ளன. நேற்று முன்தினம் வரை 1,253 குடும்பங்களைச் சேர்ந்த 3,416 பேர் சுயதனிமைப்படுத் தப்பட்டுள்ளனர். ஜனவரி மாதத்துக்குப் பின்னர் சுமார் 1,523 சுயதனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா வீதம் உணவுப்பொதிகளை வழங்கியுள்ளோம்.

இதனடிப்படையில் 15.23 மில்லியன் ரூபா இந்த வருடம் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளோருக்கு வழங்கப் பட்டுள்ளது. மேலும் 491 குடும்பங்களுக்கான நிதிக்கு விண்ணப்பங்கள் அனுப்பப்பட்டுள்ளன. நிதி கிடைத்தவுடன் உதவிகள் வழங்கப்படும்.

இந்நிலையில் தற்போது அரசாங்கத்தின் புதிய சுகாதார அறிவுறுத்தலுக்கு அமைய சுகாதார வழிமுறைகளை பொதுமக்கள் அரச, தனியார்த் துறை நிறுவனங்கள் அனைவரும் பின்பற்றிச் செயல்பட வேண்டும்.

பொது நிகழ்வுகள், தனியார் நிகழ்வுகள், அரசியல் நிகழ்வுகள் என அனைத்தும் இரண்டு வாரங்களுக்குத் தடை செய்யப் பட்டுள்ளன. எனவே மக்கள் ஒன்றுகூடல்களைத் தடுப்பதற்காக எடுக்கப்பட்டுள்ள இந்த நடைமுறைகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டும். பொதுமக்கள் ஒன்று கூடும் இடங்களில் சமூக இடைவெளியைப் பேணுதல் மிக மிக அவசியமானது.

பிரதேச செயலர் மட்டத்திலும், கிராம மட்டங்களில் கொரோனா தொடர்பான விழிப்புணர்வை பொதுமக்களுக்கு ஏற்படுத்தி வருகின்றோம். இந்த விழிப்புணர்வு செயல்பாடானது தொடர்ச்சியாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

தற்போதைய நிலையில் யாழ்ப்பாணம் மாவட்டத்தை முடக்குவதற்கான எந்தத் தீர்மானமும் இல்லை. ஆனால், அரசாங்கம் ஏனைய மாவட்டங்களில் சில கிராம உத்தியோகத்தர் பிரிவுகளை சுயதனிமைப் படுத்தலுக்குட்படுத்தி வருகின்றது.

அந்தவொரு நிலைமை யாழ்.மாவட்டத்துக்கு இன்னும் ஏற்படவில்லை. அவ்வாறு ஏற்படும் போது நிச்சயமாக முடக்குவது தொடர்பான தீர்மானம் எடுக்கப்படலாம்.

அதற்காக தற்போதைய நிலையில் பொதுமக்கள் பீதியடையத் தேவையில்லை.

பொது மக்கள் ஒன்றுகூடல்களைத் தவிர்த்து பாதுகாப்பாக நடந்து கொண்டால் இவ்வாறான அசௌகரியங்களை தவிர்த்துக் கொள்ளலாம். ஆகவே, அசௌகரியங்கள் ஏற்படுவதை தவிர்ப்பதற்கான பொறுப்பு மக்களிடம்தான் இருக்கின்றது- என்றார். (எ)

# வழிபாட்டு இடங்களில் சுகாதார நடைமுறை பின்பற்றப்படவில்லை

## யாழ். அரச அதிபர் அதிருப்தி

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ். மாவட்டத்தில் வழிபாட்டுத் தலங்களில் சுகாதார நடைமுறைகள் உரிய முறையில் பின்பற்றப்படாமை கவலையளிக்கிறது என அரசாங்க அதிபர் கணபதிப்பிள்ளை மகேசன் தெரிவித்தார்.

யாழ்.மாவட்ட செயலகத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்: தற்போதைய கொரோனா நிலைமையில் அரசாங்கத்தால் புதிய சுகாதார நடைமுறைகள் வெளியிடப்பட்டுள்ளன.

வழிபாட்டு இடங்களில் 50 பேருக்கு மாத்திரமே அனுமதி வழங்கப்பட்ட நிலையில் யாழ்ப்பாண மாவட்டத்தில் வழிபாட்டு இடங்களில் இந்த நடைமுறையை பொதுமக்கள் அனுசரித்துச் செல்லவில்லை என்பது அவதானிக்கப் பட்டுள்ளது.

எனவே, இவ்வாறு அலட்சியப்படுத்துவதை விடுத்து சுகாதார நடைமுறைகளை பொதுமக்கள் இறுக்கமாகக் கடைப்பிடிக்க வேண்டும்.

பொதுமக்களின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காகவே இந்த சுகாதார நடைமுறைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

எனவே, ஆலயங்களில் 50 பேருக்கு மேல் ஒன்றுகூடுவதை பொதுமக்கள் தவிர்த்துக்கொள்ள வேண்டும்.

இந்த விடயங்களை ஆலய பரிபாலன சபையினர் மற்றும் ஆலய நிர்வாகத்தினர் கண்காணித்து ஒத்துழைப்பு வழங்க வேண்டும். வழிபாட்டு இடங்களில் இறுக்கமான நடைமுறைகளைப் பின்பற்ற வேண்டியது அவசியமானது- என்றார். (எ-3)

# மாகாண பாடசாலைகள் அனைத்துக்கும் விடுமுறை

கேகாலை,ஏப்.28

கேகாலை மாவட்டத்திலுள்ள அனைத்து மாகாண பாடசாலைகளுக்கும் நாளை மறுதினம் 30ஆம் திகதி வரை விடுமுறை வழங்கத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

கொரோனா ஒழிப்புக்கான செயலணியால் நேற்று ஒழுங்கு செய்யப்பட்டிருந்த கூட்டத்தின் போதே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. இந்தத் தகவலை சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கிரி கொப்பேகடுவ தெரிவித்தார். (எ)

# கொரோனா தடுப்பூசியின் 2ஆம் டோஸ் இன்று முதல்

கொழும்பு,ஏப்.28

ஒக்ஸ்போர்ட் அஸ்ராசெனேகா தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் இன்று முதல் வழங்கப்படவுள்ளது என இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமண தெரிவித்துள்ளார்.

இதனடிப்படையில் சுகாதாரப் பிரிவினருக்கு முதலில் அதனை வழங்கத் திட்டமிடப் பட்டுள்ளது என அவர் குறிப்பிட்டார். (எ)

# அநுராதபுரம் கல்வி வலயத்தில் 13 பாடசாலைகளுக்கு விடுமுறை

அநுராதபுரம்,ஏப்.28

அநுராதபுரம் கல்வி வலயத்துக்குட்பட்ட 13 பாடசாலைகளை மூடுவதற்குத் தீர்மானிக் கப்பட்டுள்ளது.

இம்மாதம் மாதம் 30 ஆம் திகதி வரை இவ்வாறு பாடசாலைகளை மூடுவதற்குத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டுள்ளது என வடமத்திய மாகாண ஆளுநர் தெரிவித்துள்ளார். (எ)

# பஸ் கடத்தல்: மூவர் கைது

கொழும்பு,ஏப்.28

கடந்த 21 ஆம் திகதி அதிகாலை ஹங்வெல்ல, களுஅக்கல பகுதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த நிலையில் கடத்திச் செல்லப்பட்டிருந்த பஸ் ஒன்று நேற்று முன்தினம் பொலிஸாரால் கண்டுபிடிக் கப்பட்டது.

சி.சி.ரி.வி காணொலிகள் மூலம் மேற்கொண்ட விசாரணையின் அடிப்படையில் சப்புகஸ்கந்த பகுதியில் வைத்து குறித்த பஸ் கண்டு பிடிக்கப்பட்டது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

பஸ் முன் பகுதி மற்றும் பின்பகுதியின் நிறம் மாற்றப்பட்டு இலக்கத் தகடும் மாற்றப்பட்டிருந்ததாக பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மூவர் கைது செய்யப்பட்டனர் எனப் பொலிஸார் கூறினர். (எ)

# சுகாதார நடைமுறைகளைக் கண்காணிக்க யாழ். நகரில் இராணுவத்தினர் களமிறக்கம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ். நகர் மற்றும் புறநகர்ப் பகுதி பிரதான சந்திகளில், பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவதைக் கண்காணிப்பதற்கு நேற்றுக்காலை முதல் இராணுவத்தினர் களமிறக்கப் பட்டனர்.

பிரதான சந்திகளில் நிற்கும் இராணுவத்தினர் முகக்கவசங்களை உரியமுறையில் அணியாதவர்களை எச்சரித்து அவற்றை உரிய முறையில் அணிந்து செல்ல பணித்து வருகின்றனர். பொதுமக்கள் ஒன்று கூடுவதையும் தடுப்பதோடு யாழ். நகரப் பகுதிகளில் சன நெரிசலைத் தடுக்கும் செயல்பாட்டினையும் முன்னெடுத்து வருகின்றனர்.

பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை உரிய முறையில் கடைப்பிடிப்பதை உறுதிப்படுத்தும் முகமாகவும் மக்களின் பாதுகாப்புக்காக இராணுவத்தினர் கடமையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## முககவசம் அணியாத பிரதமருக்கு தாய்லாந்தில் ரூ. 35,000 அபராதம்!

பாங்கொக், ஏப். 28

ஆலோசனை கூட்டத்தில் முககவசம் அணியாதமையால் தாய்லாந்து பிரதமருக்கு 35 ஆயிரம் ரூபாய் அபராதம் விதிக்கப்பட்டுள்ளது.

தாய்லாந்து நாட்டில் கொரோனா தொற்று பரவலை கட்டுப்படுத்த, பல்வேறு நோய் கட்டுப்பாட்டு விதிகளை அந்நாட்டு அரசாங்கம் நடைமுறைப்படுத்தியது.

இந்த வகையில் நாடு முழுவதும் பொது இடங்களில் மக்கள் முகக் கவசம் அணிவது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. குறிப்பாக தலைநகர் பாங்கொக்கில் மக்கள் எல்லா நேரங்களிலும் முக கவசம் அணிந்து இருக்க வேண்டும் என உத்தரவிடப்பட்டுள்ளது. முக கவசம் அணியாதவர்களுக்கு 20 ஆயிரம் பாட் (இலங்கை மதிப்பில் சுமார் ஒரு இலட்சத்து 15 ஆயிரம் ரூபாய்) வரை அபராதம் விதிக்கப்பட முடியும்.

இந்நிலையில், தலைநகர் பாங்கொக்கில் தடுப்பூசி கொள்வனவு தொடர்பில் நடந்த ஆலோசனை கூட்டத்தில் பிரதமர் பிரயுத் சான் ஓச்சா முகக் கவசம் அணியாமல் பங்கேற்றார். இது பெரும் சர்ச்சையை கிளப்பியது.

பிரதமரின் இந்த செயலுக்கு பல்வேறு தரப்பிலிருந்தும் விமர்சனங்கள் எழுந்ததை தொடர்ந்து, பாங்கொக் நிர்வாகம் அவருக்கு 6 ஆயிரம் பாட் (சுமார் 35 ஆயிரம் இலங்கை ரூபாய்) அபராதம் விதித்தது. (ஐ)



## மியன்மாரின் புற காவலரணை புரட்சி படைகள் கைப்பற்றின!

யங்கூன், ஏப். 28

கரேன் தேசிய ஒன்றிய படைகள் செவ்வாய்க்கிழமை அதிகாலை தாய்லாந்தின் எல்லைக்கு அருகிலுள்ள மியன்மார் இராணுவத்தின் புற காவல் நிலையம் ஒன்றை கைப்பற்றின என்று அந்தப் படைகளின் ஊடகப் பிரிவு தலைவர் படோ சா தாவ் நீ ரொய்ட்டர்ஸ் செய்திச் சேவையிடம் தெரிவித்தார்.

கரேன் தேசிய ஒன்றிய படைகள் என்பது மியன்மாரில் சிறுபான்மை இனத்தவரான கரேன் மக்களுக்காக போராடி வரும் ஓர் அமைப்பாகும். இந்தப் படைகள் மியன்மார், தாய்லாந்து எல்லையில் போரிட்டு வருகின்றன.

தாய்லாந்தின் கிழக்கு எல்லைக்கு அருகே உள்ள மியன்மாரின் இராணுவ புறக்காவல் நிலையத்தையே கரேன் தேசிய ஒன்றிய படைகள் கைப்பற்றியுள்ளன. இந்த மோதலில் ஏற்பட்ட உயிரிழப்புகள் மற்றும் சேதங்கள் குறித்து அந்தப் படைகள் பரிசீலித்து வருகின்றன என்று தெரிவிக்கப்பட்டது.

இதனிடையே இந்த மோதலில் தமது தரப்பில் எந்தப் பாதிப்பும் ஏற்படவில்லை என்று தாய்லாந்து அறிவித்துள்ளது. அத்துடன் நிலைமையை அவதானித்து வருவதாகவும் அந்நாடு தெரிவித்தது.

எனினும், டாட்மாடா என்று அழைக்கப்படும் மியன்மார் இராணுவம் இது தொடர்பில் உடனடியாக எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை.

கடந்த பெப்ரவரி முதல், மியன்மார் ஆட்சியை இராணுவம் கைப்பற்றியது. இதையடுத்து அங்கு கொந்தளிப்பு நிலை காணப்படுகின்றது. இந்நிலையில் கரேன் தேசிய ஒன்றிய படைகள் தாக்குதலை அதிகரித்துள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

### இந்தியாவில் எல்லை மீறும் இறப்புகள்:

## பூங்கா, தரிப்பிடம், மைதானங்களில் தகன மேடைகள் உருவாகும் அவலம்!

புதுடில்லி, ஏப். 28

இந்தியாவில் புதிய வகை கொரோனா தொற்றாலும், ஒட்சிசன் தட்டுப்பாட்டாலும் நாளாந்த மரணங்களின் எண்ணிக்கை உயர்கின்றன. தலைநகர் புதுடில்லியில் நாளாந்த மரண எண்ணிக்கை 380ஆக உயர்ந்துள்ளது. இதனால், பூங்காக்கள், மைதானங்கள், வாகன தரிப்பிடங்கள் எனப் பல இடங்களிலும் தகன மேடைகள் உருவாக்கப்படுகின்றன.

ஒருசில நாட்களில் மட்டும் இந்தியா முழுவதும் 10 இலட்சத்துக்கும் அதிகமான கொரோனா தொற்று எண்ணிக்கை பதிவாகிறது. இந்நிலையில், தொற்றின் மொத்த எண்ணிக்கை ஒரு கோடியே 70 இலட்சத்தை நெருங்குகின்றது. நாளாந்த மரணங்களும் 2500இற்கும் மேல் உயர்ந்துள்ளது. நேற்று வரை ஒரு இலட்சத்து 92 ஆயிரம் பேர் உயிரிழந்தனர்.

ஆனால், தொற்று பாதிப்பின் உண்மையான எண்ணிக்கை மிக அதிகம் என்று கருதப்படுகின்றது. என்.டி. தொலைக்காட்சி நடத்திய ஆய்வில் டில்லியில் மட்டும் எண்ணிக்கையில் சேர்க்கப்படாத ஆயிரத்து 150 தொற்று மரணங்கள் கண்டறியப்பட்டுள்ளன.

எகிறும் மரணங்களால் உடல்களை தகனம் செய்வதில் பெரும் நெருக்குவாரங்கள் காணப்படுகின்றன. இதனால், தகனம் செய்யும் ஊழியர்கள் இரவு முழுவதும் பணியாற்றுகின்றனர். இறந்தவர்களின் உறவினர்கள், சடலங்களை எரிப்பதற்கான விறகுகளை குவித்து வருகின்றனர். அத்துடன் பிற சடங்குகளிலும் உதவி வருகின்றனர். டில்லியில் அதிகரிக்கும் மரணங்களால் வாகன நிறுத்துமிடங்களில், பூங்காக்கள், மைதானங்களில் சடலங்களை எரிப்பதற்கான தற்காலிக இடங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. (ஐ)



## 40 அமெரிக்க நிறுவனங்கள் இந்தியாவுக்கு உதவுகின்றன

நியூயோர்க், ஏப். 28

இந்தியாவில் கொரோனா பரவல் அதிகரிப்பால் ஏற்பட்டுள்ள நெருக்கடிகளை சமாளிக்க அமெரிக்காவின் 40 நிறுவனங்களின் பிரதம நிறைவேற்று அதிகாரிகள் உதவ முன்வந்துள்ளனர். இவர்களின் முயற்சியால் அடுத்தவாரம் 20 ஆயிரம் ஒட்சிசன் செறிவூட்டிகள் இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன.

இந்தியாவில் கொரோனாவின் 2ஆம் அலையின் தாக்கத்தால் நாளாந்தப் பாதிப்பு 3 இலட்சத்தை கடந்து வருகின்றது. உயிரிழப்புகளும் 2500ஐ கடந்துள்ளன.

பல மருத்துவமனைகளிலும் ஒட்சிசன் வாயு பற்றாக்குறை நிலவி வருகின்றது. இந்நிலையில், பல நாடுகளும் இந்தியாவுக்கு உதவி வருகின்றன. அண்மையில், கூகுள் நிறுவனம் 337 கோடி ரூபாவை உதவித் தொகையாக அறிவித்துள்ளது.

இந்நிலையிலேயே, கொரோனாவுடன் போராடும் இந்தியாவுக்கு அமெரிக்காவின் 40 நிறுவனங்கள் 20 ஆயிரம் ஒட்சிசன் வாயு செறிவூட்டிகள் வழங்கப்படவுள்ளன. முதல் கட்டமாக ஆயிரம் ஒட்சிசன் செறிவூட்டிகள் எதிர்வரும் மே 5ஆம் திகதி இந்தியாவுக்கு அனுப்பி வைக்கப்படவுள்ளன. (ஐ)

## இந்தியாவின் நிலைமை இதயத்தை நொறுக்குகிறது

### உலக சுகாதார ஸ்தாபன தலைவர்

ஜெனிவா, ஏப். 28

இந்தியாவில் கொரோனா வைரஸ் தொற்று நோயால் ஏற்பட்டுள்ள பேரவலம் இதயத்தை நொறுக்கும் வகையில் அமைந்துள்ளது என்று உலக சுகாதார ஸ்தாபனத்தின் தலைவர் டெட்ரோஸ் அதானோம் கெப்ரேயஸ் தெரிவித்துள்ளார்.

இந்தியாவில் தினசரி தொற்றாளர் தொகை மூன்றரை இலட்சத்துக்கு அதிகமாகப் பதிவாகி வருகிறது. தினசரி மரணங்களும் 2,500-ஐக் கடந்து பதிவாகி வருகிறன.

ஒட்சிசனுக்குப் பெரும் பற்றாக்குறை ஏற்பட்டுள்ளதால் அதிகளவானோர் உயிரிழக்கின்றனர். அத்தியாவசிய மருந்துகளுக்கும் கடும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது.

இந்நிலையில், இந்தியாவில் அண்மைக்காலமாக கொரோனா பாதிப்பு அதிகரித்து வருவதும் பாதிக்கப்பட்டோரின் குடும்பத்தினர் மருந்து, மருத்துவ உபகரணங்கள் வேண்டி சமூக வலைதளங்களில் மன்றாடுவதும் வேதனையளிக்கிறது என்று டெட்ரோஸ் அதனோம் கூறியுள்ளார். (ஐ)

## பிரான்ஸில் படுகொலையானவர் இலங்கை பெண் என அடையாளம்!

### கொலையில் தொடர்புடையவர் கைது

பாரிஸ், ஏப். 28

பிரான்ஸின் தலைநகர் பாரிஸின் அர்னோவீல் பகுதியில் கடந்த மார்ச் 31 ஆம் திகதி கழுத்து வெட்டப்பட்ட நிலையில் சடலமாக மீட்கப்பட்டிருந்த ஆசிய வம்சாவளிப் பெண் இலங்கையைச் சேர்ந்தவர் என அடையாளம் காணப்பட்டுள்ளார்.

முதலில் இவர் இந்திய - பாகிஸ்தான் பின்னணியை கொண்டவராக இருக்கக் கூடும் என்று பொலிஸார் தெரிவித்திருந்தனர். எனினும், அவர் பாரிஸ் புறநகரான சார்ஸல் பகுதியைச் சேர்ந்த 40 வயதான இலங்கைப் பெண் என்பது தற்போது தெரியவந்துள்ளது. ஆனால், அவர் இலங்கைத் தமிழரா என்பதை உடனடியாக உறுதி செய்யமுடியவில்லை அவரது பெயர் விவரங்களும் வெளியிடப்படவில்லை.

கொலை நடந்த நாளில் குறித்த பெண்ணுடன் காணப்பட்டவர் எனக் கூறப்படுகின்ற இலங்கையரான ஆண் ஒருவரை விசாரணையாளர்கள் கைது செய்ததை அடுத்தே பெண்ணின் சடலம் சில வாரங்களின் பின்னர் அடையாளம் காணப்பட்டது என்று பாரிஸ் ஊடகங்



கள் தெரிவித்துள்ளன.

கொலையுண்ட பெண் சார்ஸல் பகுதியில் கத்தோலிக்க சமூக நல அமைப்பு ஒன்றினால் நிர்வகிக்கப்படுகின்ற வதிவிடத்தில் வசித்து வந்த காரணத்தால் அவர் காணாமற்போன விடயம் உடனடியாக எவருக்கும் தெரிய வரவில்லை என்று கூறப்படுகிறது.

பாரிஸில் உள்ள வசிப்பிடத்தில் நடத்தப்பட்ட தேடுதலை அடுத்தே கொலையுடன் தொடர்புடைய 42 வயது நபர் கைது செய்யப்பட்டிருக்கிறார். அவரது தொலைபேசி மூலமாக கிடைத்த முக்கிய தகவல்கள் பெண்ணின் கொலையில் தொடர்பு இருப்பதைக் கண்டறிய உதவியுள்ளன. (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அக்கரைப்பற்று மாநகர எல்லைக்குள் வீதியோர வியாபாரங்களுக்கு தடை!

அக்கரைப்பற்று, ஏப். 28

கொரோனா வைரஸ் பரவலைக் கட்டுப்படுத்தும் பொருட்டு, அக்கரைப்பற்று மாநகர சபைக்கு உட்பட்ட பிரதேசங்களில் வீதியோர வியாபாரங்கள் தடை செய்யப்பட்டுள்ளதாக, அக்கரைப்பற்று மாநகர மேயர் அதாஉல்லா அஹமட் சக்கி, நேற்று அறிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் தாக்கம் அதிகரித்துக் காணப்படுவதால் அதனைக் கட்டுப்படுத்துவதற்கு சுகாதார அமைச்சால் விடுக்கப் பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய, அக்கரைப்பற்று பிரதேசத்தில் கொரோனா தொற்று பரவாமல் தடுக்கும் பொருட்டு, சுகாதார பகுதியினரும் பொலிஸாரும் இணைந்து விழிப்புணர்வு நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

அக்கரைப்பற்று நகருக்கு வரும் பொதுமக்கள் முகக்கவசம் அணிந்து சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிப்பது கட்டாயமாக்கப்பட்டுள்ளது. முகக்கவசம் அணியாதவர்களை கைது செய்வதற்கு விசேட பொலிஸ் குழுக்கள் ஈடுபட்டுள்ளன எனவும் தெரிவித்தார்.

அவசிய தேவையின்றி பொதுமக்கள் எவரும் வீட்டில் இருந்து வெளியேறி வேண்டாமெனவும், அநாவசியமான போக்குவரத்தில் ஈடுபட வேண்டாமெனவும் தெரிவித்தார்.

பொதுச் சந்தைக்கு வரும் பொதுமக்களும் வியாபாரிகளும் பொலிஸார் மற்றும் சுகாதார அதிகாரிகளால் விடுக்கப்படுகின்ற ஆலோசனைகளை பின்பற்றி செயல்படுமாறும் மேயர் கேட்டுள்ளார்.

வர்த்தக நிலைய உரிமையாளர்கள் சமூக இடைவெளியைப் பேணும் முகமாக அதற்குரிய ஏற்பாடுகளை செய்ய வேண்டுமெனவும், தவறுபவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் அறிவித்துள்ளார். (ஐ)



கல்முனையில் சுற்றிவளைப்பு:

# சுகாதார நடைமுறைகளை மீறியோர் மீது நடவடிக்கை!

கல்முனை, ஏப். 28

கொரோனா தொற்று கட்டுப்பாட்டை மக்கள் பின்பற்றுகின்றனரா என்று ஆராயும் நோக்கில் கல்முனை நகர பகுதியில் நேற்று திடீர் சுற்றிவளைப்பு மேற்கொள்ளப்பட்டது.

கல்முனை சுகாதார பிராந்திய சேவைகள் பணிமனை பணிப்பாளர் மருத்துவர் ஜி. சுகுணன் தலைமையில் நேற்று மதியம் இடம்பெற்ற இந்த சுற்றிவளைப்பில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள், பொலிஸார், இராணுவத்தினர் பங்கேற்றனர்.

இதன்போது சுகாதார வழிமுறைகளை பேணாதோர், முகக்கவசம் அணியாதோர் என பலரும் மறித்து வைக்கப்பட்டு அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. அத்துடன், அவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டன.

மேலும், மக்கள் நெரிசலாக கூடுவதை எவ்வாறு தவிர்க்கலாம் என்பது தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டு, பொது மக்களும் அவசியம் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுங்குவிதிகள் குறித்து எடுத்துரைக்கப்பட்டது. (ஐ)

# 1850 கிலோ கஞ்சாவுடன் வாழைச்சேனையில் நபர் கைது!

மட்டக்களப்பு, ஏப். 28

கஞ்சா வியாபாரம் செய்த ஒருவரை தாம் கைது செய்துள்ளனர் என்று பொலிஸார் தெரிவித்தனர். அவரிடம் இருந்து 1850 கிலோ கஞ்சாவை கைப்பற்றியுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு - வாழைச்சேனை - பிறந்துரைசேனையை சேர்ந்த 42 வயதான ஒருவரே இவ்வாறு கைது செய்யப்பட்டார்.

இராணுவ புலனாய்வு பிரிவினருக்குக் கிடைத்த தகவலுக்கு அமைய நேற்றுமுன்தினம் இரவு பொலிஸாரும் இணைந்து நடத்திய விசேட நடவடிக்கையிலேயே குறித்த நபர் கைது செய்யப்பட்டார்.

கைதானவரை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கைகளை எடுத்து வருகின்றனர். (ஐ)



# சந்தையில் எழுமாற்று சோதனை வியாபாரி ஒருவருக்கு கொரோனா!

மட்டக்களப்பு, ஏப். 28

கொரோனா தொற்று அதிகரிப்பை அடுத்து மட்டக்களப்பு கொக்குவில் வார சந்தையில் பொருள் கொள்வனவு செய்ய வந்தவர்கள் மற்றும் பொலிஸார் உட்பட 100 பேருக்கு எழுமாற்றாக பி.சி.ஆர். சோதனை நடத்தப்பட்டது.

நேற்று முன்தினம் நடந்த இந்த பரிசோதனையில் ஒரு வியாபாரிக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்டதாக சுகாதாரப் பிரிவினர் தெரிவித்தனர்.

இதையடுத்து தொற்றாளர் சிகிச்சைக்காக கொரோனா சிகிச்சை நிலையத்தில் சேர்க்கப்பட்டுள்ளார். அவருடன் நெருக்கமானவர்களை சுகாதாரப் பிரிவினர் தனிமைப்படுத்தியுள்ளனர். (ஐ)

# திருமலை, அம்பாறையில் பாடசாலைகளுக்கு பூட்டு!

திருகோணமலை, ஏப். 28

கொரோனா தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்ட நிலையில் திருகோணமலை மற்றும் அம்பாறை மாவட்டங்களில் மேலும் பல பாடசாலைகள் மூடப்பட்டன.

திருகோணமலை மாவட்டத்தின், கந்தளாய் கல்வி வலயத்திற்கு உட்பட்ட சகல பாடசாலைகளும் நாளை மறுதினம் 30ஆம் திகதி வரை மூடப்பட்டன.

அம்பாறை மாவட்டத்தின், மா ஓயா மற்றும் அம்பாறை கல்வி வலயங்களுக்கு உட்பட்ட சகல பாடசாலைகளும் மூடப்பட்டுள்ளன. கிழக்கு மாகாண ஆளுநர் இத்தகவலை வெளியிட்டுள்ளார். (ஐ)

# கிண்ணியாவில் தொற்றாளர் எண்ணிக்கை 134ஆக உயர்வு!

கிண்ணியா, ஏப். 28

கிண்ணியா சுகாதார பிரிவுக்குட்பட்ட பிரதேசத்தில் மேலும் 5 பேர் கொரோனா தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என கிண்ணியா சுகாதார வைத்திய அதிகாரி எம்.எச்.எம்.றிஸ்வி தெரிவித்தார்.

இதன்படி, கிண்ணியா - மாஞ்சோலைசேனை கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த ஆசிரியர் ஒருவரும் சீனன்குடா சிமெந்துத் தொழிற்சாலை ஊழியர் ஒருவரும் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர்.

அத்துடன், பெரிய கிண்ணியா கிராம சேவகர் பிரிவைச் சேர்ந்த, தாயொருவரும் மகளும் கொரோனா தொற்றுக்கு இலக்காகியுள்ளனர். அவர்கள் சம்பூர் பொலிஸ் நிலையத்தில் பொலிஸ் உத்தியோகத்தராக கடமையாற்றுபவரின் நெருங்கிய உறவினர்கள் என்பதால், குறித்த பொலிஸ் உத்தியோகத்தரும் தொற்றாளராக இனங்காணப்பட்டிருக்கிறார்.

கிண்ணியா தள மருத்துவமனைக்கு நேற்று முன்தினம் சிகிச்சைக்காக அவர்கள் ஐவருக்கும் அன்ரிஜன் பரிசோதனையில் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது.

கொரோனா 2ஆவது அலையில் 134 பேர் கிண்ணியாவில் தொற்றாளர்களாக இனங்காணப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தந்தை செல்வாவின் நினைவுநாளில் மரக்கன்றுகள் வழங்கப்பட்டன!



திருகோணமலை, ஏப். 28

இலங்கை தமிழ் அரசு கட்சியின் ஸ்தாபக தலைவர் தந்தை செல்வாவின் நினைவுதினமான நேற்று முன்தினம் இளைஞர்களுக்கு மரக்கன்றுகளை வழங்கி வைத்தார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவரும் திருகோணமலை பாராளுமன்ற உறுப்பினர் இரா. சம்பந்தன்.

அவரின் வீட்டில் இந்த நிகழ்வு இடம்பெற்றது. இளையோரை ஊக்குவிக்கும் விதமாக இந்த மரக்கன்றுகள் வழங்கி வைக்கப்பட்டன. (ஐ)

# பஸில் ராஜபக்ஷவின் பிறந்தநாளில் மட்டக்களப்பில் நலத் திட்டங்கள்!

மட்டக்களப்பு, ஏப். 28

ஆளும் சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சியின் தேசிய அமைப்பாளர் பஸில் ராஜபக்ஷவின் பிறந்ததினத்தை முன்னிட்டு மட்டக்களப்பில் பல நலத் திட்டங்களில் அந்தக் கட்சியினர் ஈடுபட்டனர்.

நேற்று காலை, மட்டக்களப்பு இருதயபுரத்திலுள்ள மாவட்ட தலைமை காரியாலயத்தில் அந்தக் கட்சியை சேர்ந்தவர்கள் குருதி தானம் வழங்கினர்.

அதன் பின்னர் பிறந்தநாள் நிகழ்வுகளை நடத்தினர். நிகழ்வில் பங்கேற்றவர்களுக்கு பயன்தரு மரங்களையும் அக்கட்சியினர் வழங்கினர். (ஐ)

# புத்தாண்டு நிகழ்வு ரத்து

திருகோணமலை, ஏப். 28

திருகோணமலை மாவட்ட செயலகத்தால், மே 2ஆம் திகதி நடத்தத் திட்டமிடப்பட்ட புத்தாண்டு விளையாட்டு நிகழ்வுகள், கொரோனா பரவல் அச்சம் காரணமாக பிற்போடப்பட்டதாக மாவட்ட செயலாளர் சமன் தர்சன பாண்டிகோராள தெரிவித்துள்ளார். (ஐ)

# யானை தாக்கி முதியவர் பலி!

திருகோணமலை, ஏப். 28

காட்டுக்கு சென்ற முதியவர் யானை தாக்கி உயிரிழந்தார்.

இந்தச் சம்பவம் நேற்று அதிகாலை 5 மணியளவில் திருகோணமலை - சேருநுவர - தங்கநகரில் இடம்பெற்றுள்ளது. இதில், அதே இடத்தை சேர்ந்த பி. எச். டி. சுவேற்றி சவரிமுத்து (வயது 77) என்பவரே உயிரிழந்தார்.

வீட்டுக்கு பின்னால் உள்ள காட்டுப் பகுதிக்குச் சென்றபோதே யானை அவரைத் தாக்கியதில் முதியவர் உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலதிக விசாரணைகளை சேருநுவர பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org





# தெல்லிப்பழையில் பொலிஸாரால் நேற்று கொரோனா விழிப்புணர்வு செயல்திட்டம்

யாழ்ப்பாணம்,ஏப்.28

யாழ். தெல்லிப்பழையில் கொரோனா விழிப்புணர்வு செயல்திட்டம் பொலிஸாரால் நேற்றுக் காலை முன்னெடுக்கப்பட்டது.

காங்கேசன்துறை சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் ஆனந்த ஹட்டகட்சியின் வழிகாட்டலில் தெல்லிப்பழை பொலிஸ் பரிசோதகர் மேர்சன் இந்திக சில்வாவின் தலைமையில் இந்த விழிப்புணர்வு செயல்திட்டம் முன்னெடுக்கப்பட்டது.

வர்த்தக நிலையங்களில் வர்த்தகர்கள் செயல்படும் விதம், பேருந்துகளில் பயணிப்பவர்கள் மற்றும் சந்தைகளில் வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுபவர்கள் மற்றும் பொதுமக்களுக்கு விழிப்புணர்வு மேற்கொள்ளப்பட்டது.

முகக்கவசம் அணிவது மற்றும் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றுவது குறித்தும் இதன்போது தெளிவுபடுத்தப்பட்டது. இதேவேளை, முகக்கவசம் அணியாதோருக்கு பொலிஸாரால் கடும் எச்சரிக்கை விடுக்கப்பட்டது. (எ-03)

# தேசிய பாதுகாப்பு மூலமே பொருளாதாரம் மேம்படும்

## சமல் ராஜபக்ஷ உறுதி



கொழும்பு,ஏப்.28

**தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்தினால் மாத்திரமே பொருளாதாரத்தை மேம்படுத்த முடியும். தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்ட காரணத்தால்தான் 30 வருட கால சிவில் யுத்தமும், ஈஸ்டர் குண்டுத்தாக்குதலும் இடம்பெற்றது.**

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சி காலத்தில் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்குவது அரசாங்கத்தின் பிரதான பொறுப்பாகும் என நீர்ப்பாசனம், அனர்த்த முகாமைத்துவம் மற்றும் தேசிய பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் சமல் ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றுகையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

நாடு அனைத்து துறைகளிலும் முன்னேற்றமடைய வேண்டுமாயின் தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட வேண்டும்.

தேசிய பாதுகாப்பை மையப்படுத்தி அனைத்துச் செயல்பாடுகளும் முன்னெடுக்கப்படும் என்பதை பல காரணிகளை அடிப்படையாகக் கொண்டு விளங்கிக்கொள்ள முடியும்.

தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டதால் 1983 ஆம் ஆண்டு தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு தோற்றம் பெற்றது.

தேசிய பாதுகாப்பை உறுதிப்படுத்த முடியாத காரணத்தால் சிவில் யுத்தம் 30 வருட காலம் வரை நீடித்தது.

இதனால் இரு தரப்பிலும் பாரிய விளைவுகள் தோற்றம் பெற்றன. 2005 ஆம் ஆண்டுக்குப் பிறகு பாரிய போராட்டத்துக்கு மத்தியில் 30 வருட கால யுத்தம் நிறைவுக்கு கொண்டு வரப்பட்டு தேசிய பாதுகாப்பு உறுதிப்படுத்தப்பட்டது.

நல்லாட்சி அரசாங்கம் தேசிய பாதுகாப்புக்கு முன்னுரிமை வழங்கவில்லை. பல்வேறு காரணிகளால் தேசிய பாதுகாப்பு பலவீனப்படுத்தப்பட்டது.

இதன் காரணமாகவே ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் இடம்பெற்றது. இத்தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டிய நல்லாட்சி அரசாங்கத்தின் உறுப்பினர்கள் இன்று தற்போதைய அரசாங்கத்துக்கு எதிராகக் கருத்துரைக்கின்றனர்.

முன்னாள் ஜனாதிபதி தற்போதைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவின் ஆட்சிக்காலத்தில் குண்டுத்தாக்குதல்கள் இல்லாதொழிக்கப்பட்டன.

ஆகவே, ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் அரசாங்கத்தை விமர்சிப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது.

ஏப்ரல் 21 குண்டுத்தாக்குதல் சம்பவம் தொடர்பில் தற்போதும் விசாரணை நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன. குண்டுத்தாக்குதலுக்குப் பொறுப்புக்கூற வேண்டியவர்கள் யார்? பொலிஸார் பொறுப்புக்களை மீறியுள்ளார்களா? என்பது தொடர்பில் துறைசார் மட்டத்தில் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன- என்றார். (எ)

# பாராளுமன்ற உறுப்புரிமையை மே மாதம் பெறுகிறார் ரணில்



கொழும்பு,ஏப்.28

ஐக்கிய தேசியக் கட்சிக்கு கடந்த பொதுத் தேர்தலின் போது கிடைக்கப்பெற்ற தேசிய ஆசனத்தில் அந்தக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்ற உறுப்புரிமையைப் பெற்றுக்கொள்ளவுள்ளார்.

மே மாதம் பாராளுமன்ற அமர்வில் கலந்துகொள்வதற்கான இறுதிக்கட்ட தீர்மானம் எடுக்கப்பட்டுள்ள நிலையில் தற்போது நாட்டில் காணப்படுகின்ற மக்களின் பொருளாதாரப் பிரச்னைகள், கொரோனா வைரஸ் அச்சுறுத்தல், எதிர்க்கட்சி உறுப்பினர்களுக்கு எதிரான நடவடிக்கைகள் குறித்து பரந்துபட்ட நடவடிக்கைகளை எடுப்பது தொடர்பில் நேற்று செவ்வாய்க்கிழமை சிறிகொத்தாவில் முக்கிய கலந்துரையாடல் இடம்பெற்றது.

ஐக்கிய தேசிய கட்சியின் தலைமைத்துவம் தற்போது நாட்டிற்கு அத்தியாவசியமான தொன்றாகியுள்ளது.

எனவே எதிர்க்கட்சி உறுப்பினர்கள் மாத்திரமல்ல ஆளும் கட்சியிலிருந்தும் தேசிய பட்டியல் பாராளுமன்ற உறுப்புரிமை பெற்றுக்கொள்ளுமாறு விடுக்கப்பட்ட கோரிக்கையை ஏற்கத் தீர்மானித்துள்ளதாக கட்சியின் மத்திய செயல்குழு உறுப்பினர்களிடம் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றத்துக்குள் மீண்டும் வலுவானதொரு எதிர்க்கட்சியின் செயல்பாடுகள் குறித்து பல தரப்பினரும் ரணில் விக்கிரமசிங்கவிடம் கலந்துரையாடியமை தொடர்பில் செய்திகள் வெளியாகியிருந்தன.

அந்த வகையில் தற்போது ஐக்கிய தேசியக் கட்சிக்கு கிடைக்கப்பெற்றுள்ள தேசிய பட்டியல் ஆசனத்தில் ரணில் விக்கிரமசிங்க பாராளுமன்றம் செல்லவுள்ளார்.

ஆரம்பத்தில் குறித்த தேசிய பட்டியல் ஆசனத்தை பிரதித் தலைவர் ருவான் விஜேவர்த்தனவுக்கு வழங்கத் தீர்மானிக்கப்பட்டது. ஆனால், காலப்போக்கில் தேசிய அரசியலில் ஏற்பட்ட மாற்றங்களால் பலரும் ரணில் விக்கிரமசிங்க குறித்து கவனம் செலுத்தி கருத்துக்களை முன்வைத்தனர்.

எவ்வாறாயினும் எதிர்த்தரப்பு பாராளுமன்ற உறுப்பினர்களின் விவகாரங்களில் ஐக்கிய தேசியக் கட்சியின் சட்டப் பிரிவு ஆதரவாகச் செயல்படத் தீர்மானித்துள்ளது.

பாராளுமன்ற உறுப்பினர் ஹரீன் பெர்னாண்டோவுக்குத் தேவையான சட்ட பாதுகாப்புக்கு ஐ.தே.க சட்டத்தரணிகளை முன்னிலையாகுமாறு ரணில் விக்கிரமசிங்க அறிவுறுத்தியுள்ளார். (எ)

# நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளில் பங்குதாரர்களாக மகா சங்கத்தினர்!

## பௌத்த சாசனத்துக்கு முரணானது என்கிறது தேசிய பிக்கு முன்னணி

கொழும்பு,ஏப்.28

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்து மகா சங்கத்தினர் முதலில் தெளிவுபெற வேண்டும். நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளில் மகா சங்கத்தினர் பங்குதாரர்களாக மாறுவது பௌத்த சாசனத்துக்கு முரணானது என தேசிய பிக்கு முன்னணியின் செயலாளர் வகமுல்லே உதித்த தேரர் தெரிவித்தார்.

கொழும்பில் தேசிய பிக்கு முன்னணியின் காரியாலயத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் தெரிவிக்கையில்:

கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் குறித்து அரசாங்கத்துக்குள் இரு வேறுபட்ட நிலைப்பாடு காணப்படுகின்றது.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்திலும் இத்தன்மையே காணப்பட்டது. மக்களின் அரசியல் சிந்தனையை திசை திருப்புவதற்காக அரசியல் வாதிகள் இரு வேறுபட்ட கொள்கைகளைக் கொண்டுள்ளனர்.

கொழும்பு துறைமுகத்தின் கிழக்கு முனைய விவகாரத்தில் அரசாங்கம் முறையற்ற வகையில் செயல்பட முயற்சித்தது. மக்களின் கடுமையான எதிர்ப்பை தொடர்ந்து கிழக்கு முனையத்தை இந்தியாவுக்கு வழங்கும் தீர்மானத்தை அரசாங்கம் கைவிட்டது. நாட்டின் தேசிய வளங்களை பிற நாட்டவர்களுக்கு வழங்கும் கொள்கையில் அரசாங்கம் தற்போதும் உறுதியாகவுள்ளது.

பாராளுமன்றில் சமர்ப்பிக்கப்பட்டுள்ள கொழும்பு துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் தொடர்பில் மாறுபட்ட கருத்துக்கள் தோற்றம் பெற்றுள்ளன. அரசாங்கத்துக்கு ஆதரவு வழங்கிய மதத் தலைவர்களும், அரசியல் வாதிகளும் இச்சட்டமூலத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடியுள்ளனர்.

கொழும்பு துறைமுக நகர பொருளாதார சட்டமூலம் தொடர்பில் மகா சங்கத்தினர் முதலில் தெளிவுபெற வேண்டும்.

நாட்டின் பொதுச்சட்டத்துக்கு முரணான விடயங்களை அச்சட்டமூலம் கொண்டுள்ளது என்பதை அறிந்துகொள்ள முடியும். அரசியல்வாதிகள் மகா சங்கத்தினரை சந்தித்து இச்சட்டமூலம் குறித்து ஒரு சில விடயங்களை மாத்திரம் குறிப்பிடுகின்றனர்.

நாட்டுக்கு எதிரான செயல்பாடுகளில் மகா சங்கத்தினர் பங்குதாரர்களாவது பௌத்த சாசனத்துக்கு முரணானது. அரசியல்வாதிகளின் ஆலோசனைகளை முழுமையாக ஏற்றுகொள்ள முடியாது.

அவர்கள் குறுகிய நோக்கங்களை அடிப்படையாகக் கொண்டு செயல்படுபவர்கள். ஆகவே, நாட்டின் எதிர்காலம் தொடர்பில் மகா சங்கத்தினருக்கு பௌத்த சாசனத்தின் ஊடாக அதிக பொறுப்புக்கள் வழங்கப்பட்டுள்ளன. அவற்றைச் செயல்படுத்த மகா சங்கத்தினர் கவனம் செலுத்த வேண்டும்- என்றார். (எ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
Eelanadu



# நாடு திரும்ப விரும்பும் அவுஸ்திரேலிய வீரர்கள்!

சென்னை, ஏப். 28

அடம் சம்பா, கேன் றிச்சர்ட்சன், அன்ட்ரூ டை ஆகியோர் சொந்த நாட்டுக்கு திரும்பிய நிலையில் ஏனைய வீரர்களும் தங்கள் நாட்டுக்கு திரும்ப ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இதனிடையே எதிர்வரும் 15ஆம் திகதி வரை இந்தியாவிலிருந்து அவுஸ்திரேலியா வரும் விமானங்களுக்கு தடை விதிக்கப்பட்டுள்ளது. இதனால், அவுஸ்திரேலிய வீரர்கள் நாடு திரும்புவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.ஏனெனில், அவுஸ்திரேலியா தனது எல்லையை மூடிவிட்டால் அவர்கள் நாடு திரும்புவதில் சிக்கல் ஏற்பட்டுவிடும்.

இதேவேளை, வோர்ணர், ஸ்ரீவ் ஸ்மித் ஆகியோரும் நாடு திரும்ப ஆர்வம் காட்டுகின்றனர் என்று ஆஸி. ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது. மே 15 வரை இந்திய விமானங்களுக்கு தடை விதிக்கப்பட்டிருப்பதால் அவர்கள் நாடு திரும்புவது சிக்கலாகியுள்ளது. வீரர்கள், பயிற்றுவிப்பாளர்கள், வர்ணணையாளர்கள் என 30 அவுஸ்திரேலிய வீரர்கள் ஐ.பி.எல். தொடரில் பங்களிப்பு செலுத்துகின்றனர். இவர்களில் பெரும்பாலானவர்கள் அவுஸ்திரேலியா செல்ல ஆர்வம் காட்டுகின்றனர் என்றும் அந்த ஊடகம் கூறியுள்ளது. (ஐ)

## இறுதிபந்து வரை பரபரப்பு:

# ஓர் ஓட்டத்தால் டில்லியை வென்றது பெங்களூர் அணி

அஹமதாபாத், ஏப். 28

ரசிகர்களை இருக்கையின் நுனிக்கு தள்ளிய பரபரப்பான போட்டியில் ஓர் ஓட்டத்தால் டில்லி அணியை வெற்றி கொண்டது பெங்களூர் அணி.

ஐ.பி.எல். இருபது - 20 போட்டியில் நேற்றிரவு நடந்த போட்டியில் டில்லி கப்பிட்டல்ஸ், பெங்களூர் றோயல்ஸ் சலஞ்சர்ஸ் அணிகள் மோதின.

நாணயச் சுழற்சியில் வென்ற டில்லியின் அணித்தலைவர் ரிஷப் பந்த் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தார்.

இதனால், துடுப்பெடுத்தாடிய பெங்களூருக்கு கோலி, படிக்கல் இணை தொடக்கம் கொடுத்தது. கோலி 12, படிக்கல் 17, அடுத்து வந்த படிதார் 31, மக்ஸ்வெல் 25 என ஆட்டமிழந்தனர்.

எனினும் அடுத்துக் களமிறங்கிய ஏபி டி வில்லியர்ஸ் தனது வழக்கமான பாணியில் மிரட்டல் ஆட்டம் ஆடினார்.

இதனால் 20 ஓவர்களில் 5 விக்கெட்கள் இழப்புக்கு 171 ஓட்டங்களைப் பெற்றது.

ஏபி டி வில்லியர்ஸ் 5 சிக்ஸர்கள், 3 பௌண்ட்ரிகளுடன் 75 ஓட்டங்களை குவித்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

டில்லியின் பந்துவீச்சில் இஷாந்த் சர்மா, ரபாடா, ஆவேஸ் கான், அமித் மிஸ்ரா, அக்சர் பட்டேல் ஒவ்வொரு விக்கெட்டை வீழ்த்தினர்.

பதிலுக்கு 172 ஓட்டங்கள் என்ற இலக்கு நோக்கி துடுப்பெடுத்தாடிய டில்லி அணிக்கு பிரித்வி ஷா, தவான் இணை தொடக்கம் கொடுத்தது. தவான் 6 ஓட்டங்களுடனும், அடுத்து வந்த ஸ்ரீவன் ஸ்மித் 4 ஓட்டங்களுடனும் வீழ்ந்தனர்.

ஷா 21 ஓட்டங்களுடன் விழ, அணித் தலைவர் ரிஷப் பந்த் பொறுமையான ஆட்டத்தை வெளிப்படுத்தினார். அவருக்கு துணையாக நின்ற ஸ்ரொய்னிஸ் 3 பௌண்ட்ரிகளுடன் 22 ஓட்டங்களை எடுத்து வெளியேறினார்.

அடுத்து ரிஷப் பந்துடன் இணைந்த ஹெட்மேயர் அதிரடியில் மிரட்டினார். 18ஆவது ஓவரில் ஹெட்மேயர் 3 சிக்ஸர்களுடன் 21 ஓட்டங்களை குவித்து அணியை வெற்றிப் பாதை நோக்கி திருப்பினார்.

இதையடுத்து 19ஆவது ஓவரை ஹர்சல் பட்டேலிடம் கொடுத்தார் கோலி. சிறப்பான முறையில் அந்த ஓவரை வீசிய பட்டேல் ஒரு பௌண்ட்ரியுடன் 11 ஓட்டங்களையே கொடுத்தார்.

இறுதி ஓவரை வீசுவதில் ஸ்பெஷலிஸ்ட்டான பட்டேலை 19ஆவது ஓவரை வீச வைத்தமையால், 20ஆவது சிராஜிடம் கொடுத்தார் கோலி. 13 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற நிலையில் ரிஷப் பந்த், ஹெட்மேயர் அதிரடி காட்ட ஆயத்தமாகினர்.

ஆனால், சிராஜ் மிகச் சிறப்பாக பந்தை கட்டுக்கோப்பாக வீசினார். முதல் இரு பந்துகளிலும் தலா ஓர் ஓட்டத்தை கொடுத்தவர், மூன்றாவது பந்தில் எந்த ஓட்டத்தையும் வழங்கவில்லை. நான்காவது பந்தில் 2 ஓட்டங்களை கொடுத்தார். எனினும் இறுதி 2 பந்துகளையும் பௌண்ட்ரிக்கு விரட்டினார் ரிஷப் பந்த். இதனால், 20 ஓவர்களில் 4 விக்கெட்கள் இழப்புக்கு 170 ஓட்டங்களையே டில்லி அணி பெற்று ஓர் ஓட்டத்தால் தோல்வியடைந்தது.

பெங்களூர் அணியின் பந்துவீச்சில் பட்டேல் 2 விக்கெட்களை வீழ்த்தினார். ஆட்டநாயகனாக ஏபி டி வில்லியர்ஸ் தெரிவானார். (ஐ)



# பாதுகாப்பாக நாடு செல்வது எங்களின் முழுப் பொறுப்பு

## வெளிநாட்டு வீரர்களுக்கு பி.சி.சி.ஐ. உறுதி

புதுடில்லி, ஏப். 28

ஐ.பி.எலில் விளையாடும் வெளிநாட்டு வீரர்கள் பாதுகாப்பாக நாட்டுக்கு செல்வது தங்களின் பொறுப்பு என்று தொடரை நடத்தும் இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டு சபை (பி.சி.சி.ஐ.) தெரிவித்துள்ளது.

இந்தியாவில் கொரோனா பாதிப்பு அதிகமாக உள்ளதால் ஐ.பி.எல். போட்டியில் தொடர்ந்து விளையாட வீரர்களிடையே தயக்கம் நிலவி வருகிறது. இந்நிலையில், வெளிநாட்டு வீரர்கள் நாடு திரும்புவதற்கு ஆர்வம் காட்டி வருகின்றனர்.

இந்நிலையில், அணிகளுக்கு பி.சி.சி.ஐயின் தலைமை செயல் அதிகாரி ஹேமங் அமின், கடிதம் ஒன்றை அனுப்பி வைத்துள்ளார்.

அதில், இந்தியாவிலும் நிலவும் சூழலால் சிலருக்குத் தயக்கங்கள் ஏற்பட்டுள்ளதை அறிகிறோம்.

போட்டியிலிருந்து விலக முடிவெடுத்துள்ள வீரர்களின் உணர்வுகளைப் புரிந்துகொள்கிறோம்.

அவர்களுக்கு எல்லாவிதமான ஆதரவையும் அளிப்போம். அதேசமயம் அனைவரும் கரோனா பாதுகாப்பு வளையத்தில் பத்திரமாக உள்ளீர்கள் என்பதை உறுதிப்படுத்துகிறோம்.

ஐந்து நாள்களுக்குப் பதிலாகத் தற்போது இரு நாள்களுக்கு ஒருமுறை கரோனா பரிசோதனை செய்து வருகிறோம். இதற்கு முன்பு வெளியே உள்ள ஹோட்டல்களில் இருந்து உணவுகளை கொண்டு வர அனுமதித்தோம். தற்போது அதை நிறுத்தியுள்ளோம். பாதுகாப்பு நடைமுறைகளை மேலும் பலப்படுத்தியுள்ளோம்.

போட்டி முடிந்தபிறகு எப்படி சொந்த நாட்டுக்குத் திரும்புவது எனப் பலரும் கவலை கொள்வதை நாங்கள் அறிகிறோம். இதற்காக யாரும் கவலைப்பட வேண்டாம். உங்களுடைய இடத்துக்குப் பாதுகாப்பாகச் செல்வதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் பி.சி.சி.ஐ. மேற்கொள்ளும். நீங்கள் வீட்டுக்குச் செல்வதற்கான ஏற்பாடுகளை அரசுடன் இணைந்து செய்து வருகிறோம். நீங்கள் பாதுகாப்பாக வீட்டுக்குச் செல்லும்வரை ஐ.பி.எல். போட்டி நிறைவுபெறாது. மக்களின் கடினமான சூழலில் இருந்து சிறிது நேரம் அவர்களைத் திசைதிருப்பினாலும் அது சிறந்த பணியே - என்றுள்ளது. (ஐ)



# இந்தியாவுக்கு ரூ.97 இலட்சம் பட் கம்மின்ஸ் நன்கொடை!

புதுடில்லி, ஏப். 28

கொல்கத்தா நைற் ரைடர்ஸ் அணியின் வேகப்பந்து வீச்சார் பட் கம்மின்ஸ் கொரோனா தொற்றை சமாளிக்க, 50 ஆயிரம் அமெரிக்க டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 97 இலட்சத்து 50 ஆயிரம் ரூபா நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்த நன்கொடையை அவர் வைத்தியசாலையில் ஒட்சிசன் மற்றும் மருத்துவ பொருட்களை கொள்வனவு செய்யும் நோக்கில் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி அமைத்துள்ள பி.எம். கெயார்ஸ் திட்டத்துக்கு வழங்கியுள்ளார்.

இந்த ஆண்டு ஐ.பி.எல். தொடரில் இதுபோன்ற பங்களிப்பை பகிரங்கமாக அறிவித்த முதல் கிரிக்கெட் வீரர் பட் கம்மின்ஸ். அத்துடன் சக ஐ.பி.எல். நன்கொடை வழங்குமாறு அவர் அழைப்பு விடுத்துள்ளார். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 28.04.2021 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# இன்றைய தொலைக்காட்சி நிகழ்ச்சி நிரல்

**காலை**
6.00 மணி : பக்திப்பாடல்கள்
6.30 மணி : வணக்கம் டான்



6.31 மணி : தினம் ஒரு திருக்குறள்
வழங்குபவர் : சொல்லருவி லலீசன்
6.35 மணி : மதம் சார்பான நற்சிந்தனைகள்
6.55 மணி : இன்றைய பலன்
வழங்குபவர் : சைவ சித்தாந்த பண்டிதன் சிவஸ்ரீ.தியாக.சோமஸ்கந்தராஜக்குருக்கள்
7.05 மணி : உளவியல் கருத்து
வழங்குபவர் திருமதி கோகிலா மகேந்திரன்
7.15 மணி : கதை வழி அறமொழி
வழங்குபவர் : திரு. எப்.எக்ஸ் அன்ரன்
கோட்டக்கல்விப் பணிப்பாளர், நல்லூர்
7.20 மணி : சித்த மருத்துவம்
வழங்குபவர் டாக்டர் விவியன் சத்தியசீலன்
7.30 மணி : இன்றைய பத்திரிகைகளில்
8.30 மணி : காலை செய்திகள்
9.00 மணி : கலாட்டா காலை-நேரலை
10.30 மணி : தொடர்நாடகம்
11.00 மணி : பாரதீ-பெண்கள் உளவியல்

**பகல்**
12.00 மணி : சிரிக்கலாம் வாங்க-நேரலை
1.00 மணி : சாட்சியம் ( மறு ஒளிபரப்பு )
1.30 மணி : சுப்பர் சீன்ஸ்
4.30 மணி : குட்டீஸ் தர்பார்-
சிறுவர் நேரலை நிகழ்ச்சி



5.30 மணி : குறுந்திரை நேரம்
6.00 மணி : டொப் 10 மூவீஸ்



**இரவு**
7.00 மணி : COFFE WITH பிரமுகர்-
எழுத்தாளர் ராதா மேதா



8.00 மணி : இரவுச் செய்திகள்
9.00 மணி : துறைக்கு அப்பால்
10.00 மணி : யாவரும் கேளீர்

**காலை**
6.00 மணி : சிரி சிரி சிரி
8.00 மணி : சிரிப்பு சரடிவெடி
10.00 மணி : ஒரு பட கொமடி
11.00 மணி : சிரிப்போ சிரிப்பு

**பகல்**
1.00 மணி : நகைச்சுவை மன்னன்
சந்தானம் நடிப்பில் கலக்கல் காட்சிகள்
3.00 மணி : குண்டக்க மண்டக்க
5.00 மணி : ஒரு பட கொமடி
6.00 மணி : கொமடி கலாட்டா

**இரவு**
8.00 மணி : ஒரு படக்கொமடி
9.00 மணி : சிரிப்போ சிரிப்பு
10.00 மணி : விடிய விடிய சிரிப்பு தான்

**காலை**
6.00 மணி : பனிப்பூக்கள்
7.00 மணி : திசை எட்டும் இசை எட்டும்
8.00 மணி : வணக்கம் டான் மியூசிக்
9.00 மணி : மெல்லிசை
10.00 மணி : கேட்டாலே பரவசம் (நேரலை)

**பகல்**
12.00 மணி : ராஜா ராணி
1.00 மணி : விசை இசை
3.00 மணி : வட்ஸ் அப் (நேரலை)
4.00 மணி : டீ டைம் ராகங்கள் (நேரலை)
5.00 மணி : இனிது இனிது
6.00 மணி : என்றென்றும் இசை
7.00 மணி : ஓய்வெடு நிலவே

**இரவு**
8.00 மணி : காற்றில் வரும் கீதம்
9.00 மணி : நிலவு தூங்கும் நேரம்

**காலை**
5.15 மணி - தரம் 06 தமிழ்
6.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
6.45 மணி - தரம் 08 கணிதம்
7.30 மணி - தரம் 09 வரலாறு
8.15 மணி - தரம் 10 விஞ்ஞானம்
9.00 மணி - க.பொ.த உயர்தரம்
(கலைப்பிரிவு) தமிழ்
10.00 மணி - பொ.த உயர்தரம்
(வணிகப்பிரிவு) பொருளியல்
11.00 மணி - க.பொ.த உயர்தரம் (கணிதம்,
விஞ்ஞானப்பிரிவு) கணிதம்
12.00 மணி - தரம் 06 தமிழ்

**பகல்**
1.00 மணி - தரம் 07 விஞ்ஞானம்
2.00 மணி - தரம் 08 கணிதம்
3.00 மணி - க.பொ.த சாதாரண தரம் விவசாயம்
3.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
சுத்தோலிக்கம்
4.20 மணி - க.பொ.த சாதாரண தரம் ஆங்கிலம்
5.00 மணி - க.பொ.த சாதாரண தரம் கணிதம்
5.40 மணி - க.பொ.த சாதாரண தரம்
தகவல் தொழில்நுட்பம்
6.20 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள்
7.00 மணி - க.பொ.த சாதாரண மாதிரி
வினாத்தாள்

**காலை**
5.00 மணி : சிவாய மந்திரம்
6.00 மணி : சுப்ரபாதம்
6.30 மணி : சுப்ரபாதம்
07.00 மணி : இன்றைய சிந்தனை
07.05 மணி : இன்றைய நாள்
07.30 மணி : மங்கள இசை
08.00 மணி : அருளுரை
08.30 மணி : திருவாசகம்
09.00 மணி : யாழ்ப்பாணம் வடமராட்சி வல்லை
அருள்மிகு ஸ்ரீ நாகதம்பிரான் திருக்கோவில்
மஹா கும்பாபிஷேகம்

**பகல்**
12.00 மணி : திரையில் பக்தி
12.30 மணி : கொக்குவில் மனோன்மணி அம்பாள் ஆலயம்
6.00 மணி : கந்தசஷ்டி கவசம்

**இரவு**
7.00 மணி : செய்திகள்
7.30 மணி : அருளுரை
8.00 மணி : யாழ்பாணம் கொழும்புதுறை
பிள்ளையார் கோவில்

**காலை**
7.00 மணி - ஆலயப் பாடல்கள்
8.00 மணி - ஜெபமாலை
9.00 மணி - மாதா மன்றாட்டு மாலை
10.00 மணி - திருப்பலிப்பாடல்கள்
10.30 மணி - குழந்தை யேசு மன்றாட்டு
11.30 மணி - ஜெபமாலை

**பகல்**
12.00 மணி - திருகோணமலைத்திருப்பலி
1.00 மணி - மட்டக்களப்பு திருப்பலி
2.00 மணி - நற்சிந்தனை
3.00 மணி - பாடல்
4.30 மணி - திருகோணமலை திருப்பலி

**காலை**
6.00 மணி : கிராத்
7.00 மணி : இறை சிந்தனை
7.30 மணி : இஸ்லாமிய பாடல்
8.00 மணி : கலந்துரையாடல்
9.00 மணி : இஸ்லாமிய சீரிஸ்
10.00 மணி : மனதோடு பேசலாம்
10.30 மணி : கண் வசண்ணம் கை வண்ணம்
11.00 மணி : சுவனப்பாதை
11.30 மணி : வரலாறு சொல்லும் வைத்தியம்
12.00 மணி : லுகர் அதான்

**பகல்**
12.30 மணி : இஸ்லாமிய வரலாறு
1.00 மணி : இஸ்லாமிய திரைப்படம்
2.00 மணி : கஸீதா
2.30 மணி : இறை சிந்தனை
3.00 மணி : பாடல்கள்
4..00 மணி : சிறுவர் இஸ்லமிய கார்டுன்
5.00 மணி : இறை தென்றல்
6.00 மணி : தாஜீமதுல் குர்ஆன்
7.00 மணி : பிறை பிரசங்கம்

**இரவு**
8.00 மணி : இஸ்லாமிய வரலாறு
8.30 மணி : மனதோடு பேசலாம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org